வாரப்பதிப்பு விலே சதம் 20

உலகைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

# SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு
மில்க்வைற் சோப்

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 ஆடி திங்கள் 30-ம் நாள் (14—8—60) ஞாயிற்றுக்கிழமை ஸபர் 20 | இதழ் 11

# சிங்கள 'சிறீ' பிரச்னே விரைவில் தீரலாம்

## லைசென்ஸ் வழங்கும் உரிமையை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மாற்ற ஆலோசனை

## அல்லது தமிழ் 'சிறீ' க்கு சட்ட அனுமதி தரப்படலாம்

(சுதந்திரன் நிருபர்)

மோட்டார் வண்டிகளில் சிங்கள சிறீ பொறிக்கும் பிரச்னே மிக விரைவில் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்று தெரியவருகிறது. இது சம்பந்தமாக பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகாவின் அரசாங்கம் ஒரு புது வழியைக் கடைப்பிடித்து தமிழ்பேசும் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும் என்று விருப்பங்கொண்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஓடும் பஸ் வண்டிகளில் சிங்கள சிறீயைப் பொறிப்பதற்கு எதிர்ப்பு இருக்கும் காரணத்தால் பழைய ஓட்டை உடைசல் வண்டிகளே அங்கு ஓடுகின்றன.

இந்தப் பிரச்னையை நல்லபடியாகத் தீர்த்து அங்கும் புது பஸ் வண்டிகளை ஓடவிட வேண்டும் என்றும், சிங்கள சிறீயைத் தமிழ் மக்கள் வாழும் இடங்களில் வலுக்கட்டாயமாகத் திணிக்காமல் தமிழ் பேசும் மக்களின் மனோநிலைக்கு ஏற்றபடி வேறு இலக்கத் தகடுகள் பொறிப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்றும் அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது.

மோட்டார் வாகனங்களுக்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரத்தை முனிசிபல் சபை, அர்பன் சபை, கிராமச் சங்கம் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கே கையளித்துவிடுவது என்பதுதான் உத்தேசிக்கப்பட்டிருக்கும் வழியாகும்.

மோட்டார் வாகனங்களுக்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் இப்போது மத்திய அரசாங்கத்தின் கையில் இருந்து வருகிறது. மாட்டு வண்டிகள், தள்ளு வண்டிகள், சைக்கிள் வண்டிகள் ஆகிய வாகனங்களுக்கு ஸ்தல ஸ்தாபனங்கள் தாம் இப்போதும் லைசென்ஸ்கள் வழங்கி வருகின்றன.

அரசாங்கம் இப்போது உத்தேசித்திருக்கும் புதுவழி சிக்கலானதாக இருக்குமெனக் கண்டால், வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஓடும் வண்டிகள் தமிழிலே 'சிறீ' எழுத்தைப் பொறித்து ஓடலாம் எனச் சட்ட அனுமதியளிக்கப்படுமாம். இதன் பிரகாரம் தமிழ்ப் பகுதிகளில் ஓடும் இ. போ. ச. பஸ் வண்டிகள் தமிழிலேயே 'சிறீ' பொறித்து ஓட வழி பிறக்கும். அத்தோடு புது பஸ் வண்டிகளும் அங்கு போய்ச் சேரும்.

## தேர்தல் இடாப்பில் உங்கள் பெயர் இருக்கிறதா?

## இல்லாவிட்டால் 29-ந் தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்

(சுதந்திரன் நிருபர்)

புதிய தேர்தல் இடாப்புகள் (வாக்காளர் ஜாபிதாக்கள்) தயாரிக்கப்பட்டுப் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் தங்கள் பெயர்கள் இல்லை என்று காணுகிறவர்கள் தேர்தல் கமிஷனருக்குத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு இம்மாதம் 29-ந் தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

இந்த தேதிக்குப் பின்னர் விண்ணப்பித்தும் பயன் இல்லை. அவை கவனிக்கப்பட மாட்டா. தேர்தல் இடாப்புகளில் பெயர்கள் இல்லாதவர்கள் இனிமேல் வரப்போகிற பாராளுமன்றத் தேர்தலிலும் சரி உள்ளூர் ஆட்சி மன்றத் தேர்தல்களிலும் சரி வாக்களிக்க முடியாது. அது மட்டுமல்ல, எந்தத் தேர்தலுக்கும் அபேட்சகராகவும் நிற்க முடியாது.

"புதிதாகத் தயாரிக்கப்பட்ட தேர்தல் இடாப்புகளில் முந்திய தேர்தல் இடாப்புகளில் உள்ளவர்களின் பெயர்களோடு இப்போது 18 வயதைத் தாண்டி விட்டவர்களது பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பழைய இடாப்புகளிலேயே பலரது பெயர்கள் விடப்பட்டிருந்தது தெரிந்ததே. 18 வயதைத் தாண்டியவர்களின் பெயர்கள் சேர்க்கப்படுவது இது முதல் தடவையாகையால் இந்தப் புதிய தேர்தல் இடாப்புகளில் ஏராளமான ஆண்கள் பெண்களது பெயர்கள் விடுபட்டிருக்கலாம். ஆதலால் எல்லோரும் இடாப்புகளைப் பார்வையிட்டு தங்கள் பெயர்கள் இல்லாவிட்டால் குறித்த 29-ந் தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டியது கடமையாகும்.

"இறுதி நிரமத்தைப் பார்த்து இப்போது அசண்டையாக யாரும் இருப்பாராயினும் அவர்கள் தமக்கு மட்டுமல்ல தமது இனத்துக்கும் கெடுதி செய்பவர்களாவார்கள். சிறுபான்மை மக்களாக இருக்கும் தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய வாக்குரிமையைப் பேணிப் பாதுகாக்கத் தவறுவதால் தமிழ் பேசும் இனம் சாலப்போக்கில் பல மிழந்து போகும். இது ஆபத்து"—இவ்வாறு தமிழரசுப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

தமிழ் பேசும் மக்கள் நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் தமது வாக்குரிமை விஷயத்தில் மிக்க கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அழுத்திக் கூறினார்.

புதிய தேர்தல் இடாப்புகள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கச்சேரிகளிலும், டி. ஆர். ஓ. மாரின் அலுவலகங்களிலும், கிராம விதானைமார் கந்தோர்களிலும், உள்ளூர் ஆட்சி மன்றக் காரியாலயங்களிலும், பெரிய தபால் நிலையங்களிலும் பொதுமக்களின் பார்வைக்காகப் பகுதி பகுதியாக வைக்கப்பட்டிருக்கின்றன.

## அரசாங்க ஊழியர்களின் இடமாற்றம் சீர் செய்யப்படும்

## யு. என். பி.யின் பாதகத்துக்கு உடனடியாகப் பரிகாரம்

## தமிழரசார் கோரிக்கை நிறைவேறுகிறது

(சுதந்திரன் நிருபர்)

அரசியல் காரணங்களுக்காக யு. என். பி யால் முன்னர் இடம் மாற்றப்பட்ட அரசாங்க ஊழியர்களை அவர்களது பழைய இடங்களில் நியமிக்க வேண்டும் என்றும் அதன் மூலம் அந்த ஊழியர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்றும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் வற்புறுத்திய பிரகாரம் அரசாங்கம் விரைவில் அந்த வேலையைச் செய்யவிருப்பதாகத் தெரிகிறது.

மூன்று மாதங்கள் பதவியில் இருந்த யூ. என். பி. அரசாங்கம் பல அரசாங்க ஊழியர்களை அவர்கள் இருந்த இடங்களிலிருந்து வெளியே வேறு இடங்களுக்கு அனுப்பியது. இதற்கான ஒரு காரணம் சம்பந்தப்பட்ட அந்த ஊழியர்கள் ஜூலை பொதுத் தேர்தலில் தமக்கு ஆதரவாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்ளமாட்டார்கள் என்ற பயந்தானும்.

யூ. என். பி.யின் அச்சம் காரணமாக இடம் மாற்றப்பட்ட அரசாங்க ஊழியர்களுள் பெருந்தொகையினர் தமிழ் பேசும் ஊழியர்கள் ஆவர். இவர்கள் சார்பில் தமிழரசுக் கட்சியினர் குரல் கொடுத்தனர். இவர்களுக்குப் பழைய அரசாங்கத்தாரால் செய்யப்பட்டது அநீதி என்று வாதாடினர். இப்படி அநியாயமாக இடம் மாற்றப்பட்டவர்களை மீண்டும் பழைய இடங்களுக்கு அனுப்பிவிட வேண்டும் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை வற்புறுத்தினர்.

அரசாங்கம் அதற்கு இணங்கியிருப்பதாகத் தெரிகிறது. யு. என். பி. காலத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட இடமாற்றங்கள் பற்றி நன்குக் விசாரணை செய்யப்போவதாகவும் இழைக்கப்பட்ட பாதகங்களுக்கு எல்லாம் பரிகாரம் தேடப்போவதாகவும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இதன் விளைவாகப் பல தமிழ் முஸ்லிம் அரசாங்க ஊழியர்கள் மீண்டும் தங்கள் தங்கள் பழைய இடங்களுக்குச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சகலவித மூலநோய் நிவாரணி
ரிச்செலட்ஸ்
ப்ளட் பியூரிபயர்
(RICHELET'S BLOOD PURIFIER)
இரத்த சுத்தி செய்து


மூலம்
வாதம்
படை
(ECZEMA)
மாத விடாய்
கோளாறுகள்

முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடைய வேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானுகவே ஏற்படும்.
எங்கும் கிடைக்கும்.
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால் வீதி, கொழும்பு.
(போன்: 2885)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்:

# மோட்டார் கார் உற்பத்தியில் புதுமை

## அமெரிக்காவின் மின்விசை காரும் ருஷ்யாவின் பேபி காரும்

## மனிதனை முந்திக் கொண்டு சந்திரனுக்குச் செல்லப் போகிறது அதிசய வாகனம் ஒன்று

## அணுகுண்டு வெடிப்பால் வினை

மின்விசையால் ஓடும் மோட்டார் கார் ஒன்று அமெரிக்காவில் உற்பத்தியாகிறது. அதனுடைய மின்கலங்கள் தீய்ந்து போனால் வீட்டிலுள்ள 'பிளக்' இல் வைத்து மின்விசை ஏற்றிக்கொள்ளலாம். 'ஹென்றி கிலோவாட்' என்பது காருக்குப் பெயர். யுரேகா வில்லியம்ஸ் கார்ப்பரேஷன் ஹென்றி மோட்டார் பகுதி இக்காரை உற்பத்தி செய்கிறது.

காரின் முன்புறம் பதினெட்டும் பின்புறம் பதினெட்டுமாக 36 மின்கலத் தொகுப்புகள் உள்ளன. இவற்றால் இயங்கும் ஏழு குதிரைத் திறனுள்ள இயந்திரந்தான் காரை ஓட்டுகிறது. விளக்கு, ஹார்ன், மழைத்துளிகளைத் துடைக்கும் கருவி முதலியவற்றுக்கு வேண்டிய மின்விசை முன்புறமுள்ள இன்னொரு 12 வோல்ட் மின்கலத் தொகுப்பிலிருந்து கிடைக்கும்.

புதிய கார் மணிக்கு 35 மைல் வேகம் வரை செல்லக் கூடியது. 40 மைல் ஓடிய மின்கலத் தொகுப்புகளுக்குத் திரும்ப மின் விசை ஏற்படும். இதை வீட்டு "பிளக்"கிலிருந்தே செய்து கொள்ளலாம்.

மைலுக்கு ஒரு செண்ட் வீதம் செலவாகும் என்றும், மின்கலத் தொகுப்புகள் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் வரை உழைக்கும் என்றும், பின்னர் ஏறத்தாழ 200 டாலருக்குப் புதிய மின்கலத் தொகுப்புகள் வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்றும் ஹென்றி மோட்டார் கம்பனி அதிகாரிகள் கூறுகிறார்கள்.

முதலில் குறைந்த அளவிலேயே உற்பத்தி செய்கிறார்கள். வீடுதோறும் சென்று மின்விசை மீட்டர் கணக்குக் குறிப்பெடுப்பவர்கள், பணம் வசூல் செய்பவர்கள், பழுது பார்ப்பவர்கள் முதலியவர்களின் உபயோகத்தின் பொருட்டே மின்விசைக் கம்பெனிகளுக்காகப் புதிய கார் உற்பத்தி செய்யப்படுகிறது; ஆனால் நாளடைவில் பொது மக்களுக்கும் இது விற்பனைக்குக் கிடைக்கும். இப்போதுக் காரின் விலை 3,500 டாலர்.

### புதிய பேபி கார்

ருஷ்யா தயாரித்துள்ள புது வகையான 'ஜப்போராஜெட்' என்ற பேபி கார்கள் இவ்வாண்டு இந்தியாவுக்கு வருமாம். 1500 கார்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும்.

இந்தக் கார் மணிக்கு 50 மைல் வேகம் ஓடும். ஒரு தடவை பெட்ரோல் நிரப்பிக் கொண்டால் 360 மைல் தூரம் செல்லலாம். இந்தக் காரின் இன்ஜின் குளிர் பதனம் செய்யப்பட்டிருக்கும். ஒரு மின்சார சூடேற்றியும் இருக்கும். பனி காலத்தில் பொத்தானை அமுக்கினுலே என்ஜின் உருகிவிடும். பெட்ரோல் தீர்ந்து விட்டால் மின்சார சூடேற்றியின் உதவியால் காரை ஓட்டலாம்.

இந்தக் கார்களுக்கு டயர்களில் ட்யூப்கள் இல்லை. இதில் விண்ட் ஷீல்ட் வாஷரும், 5 கீர் ட்ரான்ஸ் மிஷனும், ரேடியோ வைக்க ஒரு இடமும் இருக்கும்.

### அம்புலியை ஆராய அதிசய வாகனம்

அம்புலியை ஆராய்வதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ள செயற்கைக் கோள்களில் 'தொலைவிலிருந்து இயக்கக் கூடிய சுற்றி வரும் வாகனம்' ஒன்றாகும்.

தனி வகைக் கருவிகள் அமைந்த இந்த விண்வெளி வாகனம் சந்திரனில் போய் இறங்கவும், அங்குள்ள செய்திகளை அறியவும், அறிந்தவற்றைப் பூமிக்கு ஒலிபரப்பவும் ஆற்றலுள்ளதாக இருக்கும். பூமியில் 14 நாட்கள் கொண்டது சந்திரனில் ஒரு பகல். அதேபோல் பூமியில் 14 நாட்கள் கொண்டது அம்புலியில் ஓர் இரவு. பூமியிலிருந்து அனுப்பும் அந்தப் புதிய வாகனம் அம்புலியின் பகல் வேளையில் தன் வேலையைச் செய்யும். இரவு நேரத்தில் 'தூங்கும்'.

புதிய செயற்கைக் கோளின் வேலைகளெல்லாம் பூமியிலிருந்தே கட்டுப்படுத்தப்படும்.

மனிதன் அம்புலியில் நேரில் சென்று இறங்குவதற்கு முன் தெரிய வேண்டிய விரிவான தகவல்களையெல்லாம் இந்தத் 'தொலைவுக் கட்டுப்பாட்டில் இயங்கும் சுற்று வாகனம்' அனுப்பி வைக்கும். அமெரிக்காவின் தேசிய விமான இயல், விண்வெளி நிர்வாகத்தார் தற்போது வகுத்துள்ள திட்டத்தின்படி, இந்த வாகனம் அம்புலித் தரையின் மாதிரிகளை எடுத்து, அவற்றை ஆராயும்; திங்களில் அது இடம் விட்டு இடம் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராயும்; ஆராய்ந்து கண்டவற்றை ஒலிபரப்பித் தெரிவிக்கும். இதன் நடவடிக்கைகள் யாவும் பூமியிலிருந்தே இயக்கி வைக்கப்படும்.

புதிய செயற்கைக் கோளுக்கு வேண்டிய விசையாகிய சக்தியை மின்விசையாக மாற்றும் வெயில் விசை மின்கலங்களால் கிடைக்கும்; அதனால் செயற்கைக் கோள் நிரந்தரமாக இருக்கக்கூடும்.

இத்தகைய 'தொலைவுக் கட்டுப்பாட்டுச் சுற்று வாகனம்' அம்புலியை அடைவதற்கு முன் வேறு சில செயற்கைக் கோள்களை அங்கு அனுப்பிப் பார்ப்பது அவசியம் என்று அமெரிக்க விண்வெளி நிர்வாகம் கூறுகிறது.

முதலில் சந்திரனைச் சுற்றி வானில் வட்டமிட்ட வண்ணம் அதனை ஆராய்ந்து செய்தி அனுப்பும் செயற்கைக் கோள்களை அனுப்ப வேண்டும்; நேரே போய்த் தொப்பென்று இறங்கி தொடங்கி அந்த நிலையிலே சில தகவல்களை அனுப்பும் வாகனங்களையும் அனுப்புதல் வேண்டும்.

பிறகு, மணிக்கு ஐம்பது மைலுக்கு மேற்போகாத வேகத்தில் அம்புலித் தரையில் மெதுவாக இறங்கி ஆராயும் செயற்கைக் கோள்களை அனுப்புவார்கள். அதன் பின்னர் 'தொலைவுக் கட்டுப்பாட்டுச் சுற்று வாகனம்' செலுத்தப்படும். இதற்கெல்லாம் பின்னரே மனிதனை அம்புலிக்கு அனுப்ப இயலும்.

### பத்து பணக்காரிகள்

உலகிலேயே பெரிய பணக்காரிகளான பத்துப் பேரை அமெரிக்கா தேர்ந்தெடுத்திருக்கிறது. இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் சிறந்தவர்கள்.

இந்தியாவின் 'கடல் வணிக ராணி' என்று அழைக்கப்படும் திருமதி சுமதி மொரார்ஜி இந்தப் பணக்காரிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இவர் இந்தியாவிலுள்ள ஒரு பெரிய கப்பல் கம்பனியின் நிர்வாக இயக்குநர் என்பது குறிப்பிடத்தக்கது.


இங்கிலாந்து இராணி, ஹாலந்தின் முன்னாள் இராணி வில்ஹெல்மினா, காலஞ்சென்ற ஆகாகானின் மனைவி, சிபில்டு சிமாட்டி, பிரெஞ்சு பந்தயக் குதிரைகளின் சொந்தக்காரி, வார்கட்ரா, ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த திருமதி ஏருன்கவிக், கிரீசின் 'கப்பல் அரசி' எனப்படும் மாரிகோ லெவனி சலக, கனடாவின் மர வியாபார மன்னரின் இல்லத்தரசியான திருமதி போரதி கில்லாப், ஸ்பெயினைச் சேர்ந்த ஆல்பா கோமகள் ஆகியோர் உலகிலேயே பெரும் பணக்காரிகள்!

### உலகிலேயே பெரிய திறந்த வெளி நாடக மேடை!

உலகின் மிகப் பெரிய திறந்த வெளி நாடக மேடை தலினின் நகரின் சுற்று வட்டாரத்தில் இத்திங்கள் 2-ம் வாரம் திறக்கப்பட்டிருக்கிறது. முப்பதாயிரம் உறுப்பினர்களுடைய இசைக் குழு இம் மேடையில் நின்று இசை விருந்து அளிக்க முடியும். இம் மன்றம் 7 எக்டர் (17.6 ஏக்கர்) பரப்புடைய வெளியில் அமைந்துள்ளது.

உறுதியூட்டப் பெற்ற கான்கிரீட் கட்டட உறுப்பு

(7-ம் பக்கம் பார்க்க)

இலங்கையில் எல்லோராலும் விரும்பப்படும் அலங்காரம்
ஏனெனில் இது குறைந்த செலவில் பாதுகாப்பு அளிக்கிறது

சுப்பர்
சினோசெம்

இதுவரை உற்பத்தி செய்யப்பட்டவற்றுள் அதி விசேஷமான சிமேந்து பெயின்ட்



கான்கிரீட், செங்கல், கருங்கல், அஸ்பெஸ்டஸ் மற்றும் சிமேந்து கட்டுகளில் தண்ணீர் புகாதபடி சுப்பர் சினோசெம் கெட்டியாகப் பாதுகாக்கிறது. சாதாரணமாக குறிப்புகளின்படி பூசினால் கழுவப்பட்டுப் போகாது; வெடிக்காது; உரியாது; உராய்ந்து போகாது.

சுண்ணாம்பு பூசிய சுவர்களிலோ அல்லது காங்கிரீட் பூச்சுக் கொடுத்தவற்றிலோ அவற்றைக் கெட்டியாக்கி விட்டு சுப்பர் சினோசெம் பூசலாம்.

கலப்பது சுலபம். வாங்குவதிலும் பாவிப்பதிலும் சிக்கனம். 112 இறாத்தல் சுப்பர் சினோசெம் சராசரி 3,200 சதுர அடிக்குப் பாவிக்கலாம்.

இருபத்தொரு நிறங்களில் கிடைக்கும் — 7 இறாத்தல், 56 இறாத்தல், 112 இறாத்தல் தகரங்களில்.

சுப்பர் சினோசெம் நீர்ப் பாதுகாப்பளிக்கும் சிமேந்து பெயின்ட்.




CMC SUPER SNOWCEM
WATERPROOF CEMENT PAINT

கொழும்பு கொம்மேர்ஷல் கம்பனி லிமிட்டெட்,
(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
ஜெனரல்ஸ் லேக் ரோட், கொழும்பு 2. போன்: 79351


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கேட்டுப் பாருங்கள்

குயுக்தி

இ. விஜயபாலன், அம்பாறை

கே: சைவ சமயத்தைவிட மற்றைய சமயங்கள் யாவும் ஆலயங்களில் தங்கள் தாய் மொழியில் தானே பூசை செய்கின்றன. சைவ சமயிகள் மட்டும் சமஸ்கிருதத்தைக் கட்டியழுவதேன்? தமிழில் ஆராதனை நடத்தினால் என்ன?

ப: தமிழ்க் கோயில்களில் தமிழில் ஆராதனை நடத்துவதை நான் ஆதரிக்கிறேன். தமிழில் தான் நடத்த வேண்டும். ஆனால் நீங்கள் கூறுவது போல் இங்குள்ள ஏனைய சமயங்கள் அவற்றை அனுஷ்டிக்கும் மக்களுடைய தாய் மொழியில் பூசை நடத்தவில்லை. சிங்கள மக்களின் பௌத்த ஆலயங்களில் பாளியிலும், கிறிஸ்தவ மக்களின் தேவாலயங்களில் இலத்தீனிலும், இஸ்லாமிய மக்களின் மசூதியில் அரபு மொழியிலும் தான் ஆராதனைகள் நடக்கின்றன.

ஃ

மு. கனகையா, திருகோணமலை

கே: திரு. செல்வநாயகத்தைக் காட்டிக் கொடுத்த கட்டபொம்மனுக் கட்டுரை வெளியிட்ட தமிழ்வாணன் எதிர்ப்பைக் கண்டதும் கதிகலங்கி "இது கல்கண்டின் கருத்து அல்ல" என்கிறாரே அவர் கூற்று சரியா?

ப: இல்லை. அவர் தாம் மாட்டிக்கொண்ட பொறியிலிருந்து கபடமாகத் தப்பிக்கொள்ளப் பார்க்கிறார். அக்கட்டுரை கல்கண்டின் கருத்து அல்ல வென்றால் அக்கட்டுரைக்கு 'இன்ரொடக்ஷன்' எழுதுகையில் இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரு சிறந்த பத்திரிகையில் அது வந்ததென்றும், கட்டுரை ஆசிரியர் தமிழ்க் குடிகெடுத்தான் தனிப் பெருந் தமிழ் எழுத்தாளர் என்றும் கொஞ்சம் கட்டியிருக்க வேண்டியதில்லையே. அது மட்டுமா? மூலக் கட்டுரையில் படம் எதுவும் பிரசுரமாகவில்லை. தமிழ்வாணன் புலித்தேவன் படத்தைப் போட்டுத் தடபுடல் பண்ணியிருக்கிறாரே அது ஏன்? மற்றவர்கள் அறிய வேண்டும் என்பதற்காகத் திரு. செல்வநாயகத்தைத் தாக்கி வந்த கட்டுரையை கல்கண்டில் பிரசுரித்தாராம்! அப்படியானால் எத்தனையோ சினிமா நடிக நடிகையரைத் தாக்கி இந்நேசனில் கட்டுரைகள் வருகின்றனதாமே, அவற்றையும் தமிழ்வாணன் மற்றவர்கள் அறிய மறுபிரசுரம் செய்வார் போலும்!

ஃ

மு. சண்முகம், கொழும்பு

கே: தமிழ் காங்கிரஸ் இனி என்ன செய்யப்போகிறது?

ப: தமிழரசுக் கட்சி இனி என்ன செய்யப்போகிறது என்று தமிழ் காங்கிரஸ்வாதிகள் கேட்கின்றனர். தமிழ் காங்கிரஸைப் பொறுத்த வரையில் அது ஒரு மாதர் முன்னணி அமைக்கப் போவதாகக் கேள்வி. மாதர்களின் ஆதரவினால்தான் திரு. துரையப்பா வென்றார் என்று திரு. பொன்னம்பலம் இப்போது கருதுகிறாராம். எனவே தானும் ஒரு மாதர் முன்னணி அமைத்து, எதிர்வரும் முனிசிபல் சபைத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸை அரங்கில் விட்டு, ஒரு கை பார்க்க வேண்டும் என்று திரு. பொன்னம்பலம் திட்டமிடுகிறாராம்.

ஃ

கா. க. கணபதிப்பிள்ளை, புற்றளை.

கே: வித்தியோதய சர்வகலாசாலை சிங்களக் கௌரவப் பட்டங்கள் வழங்கியுள்ளது. தமிழ் கௌரவப் பட்டங்கள் வழங்குவதானால் யாருக்கு என்ன பட்டம் வழங்க வேண்டும்?

ப: திருவாளர்கள் செல்வநாயகத்துக்கும், இராஜவரோதயத்துக்கும் டாக்டர் பட்டம் வழங்கினால் நல்லது. இப்போது பாராளுமன்ற எதிர்க்கட்சியின் ஓர் ஓரத்து முன்வரிசையில் மேற்படி இருவருக்கும் அடுத்துள்ள டாக்டர்கள், அதாவது டாக்டர் நாகநாதன், டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, டாக்டர் விக்கிரமசிங்கா ஆகியோர் பக்கத்தில் பக்கத்தில் இருக்கிறார்கள் நமது ஆலோசனைப்படி நடந்தால் முன்வரிசையில் அரை டசின் டாக்டர்கள் இருப்பார்கள் அல்லவா?

ஃ

செல்வி வள்ளியம்மை, அளவெட்டி.

கே: தங்களுக்கு சமஷ்டி அரசியல் வாதிகளுள் டாக்டர் நாகநாதனிடம்தான் பற்று உண்டு என்று கூறுகிறார்களே, தந்தை செல்வநாயகம் மீது உங்களுக்கு வெறுப்பா?

ப: கிடையாது. நிரம்பிய மதிப்பு உண்டு. திரு. செல்வநாயகம் ஓர் அரசியல் மேதை (Statesman) டாக்டர் நாகநாதன் ஓர் அரசியல்வாதி (Politician). அரசியல்வாதிகளைப் பற்றித்தான் நான் அபிப்பிராயம் சொன்னேன். அரசியல் மேதைகளைப் பற்றி அல்ல.

ஃ

து. செந்தில்நாதன், பருத்தித்துறை

கே: தலைவர் ம. பொ. சிக்குத் தமிழில் பிழையின்றி எழுதத் தெரியாது என்று கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணன் என்பவர் கூறுகிறாரே இது சரியா?

ப: தமிழைப் பிழையின்றி எழுதப் பிறருக்குத் தெரியாது என்று கூறும் ஒருவர் தாமாவது பிழையின்றி எழுத வேண்டும் அல்லவா? ம. பொ. சிக்குத் தமிழ் எழுதத் தெரியாது என்று கூறும் அதே பத்திரிகையில் முதல் பக்கத்தில் தமிழ்வாணன் என்ன எழுதுகிறார்? "ஒழுக்கமுள்ள நடிகர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால், ஒழுக்கத்தில் தலை சிறந்த நடிகர் யார் என்றால் அது எம். ஜி. ஆர். தான்!" எம். ஜி. ஆர். என்ன நாயா, பூனையா, நாற்காலியா, [illegible] என்று அஃறிணையில் [illegible] பிட்டு? தலை சிறந்த நடிகர் யார் என்றால் அவர் எம். ஜி. ஆர். தான் என்றிருக்க வேண்டும். இவ்வண்ணம் உயர்திணை அஃறிணை தெரியாதவர் ம. பொ. சிக்குத் தமிழ் தெரியாது என்கிறார். ம. பொ. சி. அழகாகத் தமிழில் பேசுவார். ஆணித்தரமாக எழுதுவார். தமிழ்வாணனுக்கு எழுதவும் தெரியாது, பேசவும் தெரியாதே.

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

ஃ

ஜே. கதிர்காமநாதன், புன்னாலை

கே: பெண்ணின் இன்பம் எதில் தங்கியிருக்கிறது?

ப: கலியாணமாகும் வரை கண்ணாடியில். கலியாணமானதும் கணவனின் தோளில். தள்ளாத வயதில் தாய்மையில்.

## பிறை நிலவு

வெட்டி எறிந்த விரல் நகம் போல் வானத்தில்
ஒட்டி இருந்ததோ? உள்ளத்தைத்—தொட்டாளின்
பட்டு உதட்டுப் பழச்சுளையை விண்ணொன்ற
தட்டத்தில் வைத்ததோ என்?

பஞ்சு முகில்வானப் படுக்கைச் சுகங்காண
மஞ்சள் மதியாளும் சென்றதால்—கொஞ்சம் போல்
நாணந்தால் மேனி நலிந்து குறைந்ததோ?
எளிந்தச் சின்ன மதி?

ஆழியில் வாழ்ந்த அழகுவெண் சங்கொன்று
மேலெழுந் தோடி மிளிர்ந்ததோ?—நீலக்
கருவான் வயலில் கதிர்வெள்ளி வெட்டும்
அரிவாளோ? என்ன அது?

ஒரு தமிழ்க் கல்ஞன் ஒவியனின் கை நீண்டு
விருந்தின் வான வெளித்திரையில்—தூங்கும்
உலகின் எழிலைப் பிறையென்று தீட்டிக்
கலையென் றளித்ததோ காண்!

'மண்ணுக்கு மட்டும் மரபல்ல போர்க்காக
விண்ணிலும் தேயும்' எனவீண்டு—பொன்னால்
சிறுக்கு மிகுந்தாடும் கிழோர்க்குப் பாடம்
உரைக்கவோ இந்த உரு?

—கா. சி. ஆனந்தன்

ஃ

க. பவளகாந்தன், கல்லடி உப்போடை.

கே: 'காதலாவது கத்தரிக்காயாவது' என்று சொல்லுகிறார்களே, காதலுக்கும் கத்தரிக்காய்க்கும் என்ன சம்பந்தம்?

ப: முதலெழுத்துக்களான க, காவைத் தவிர வேறு யாதுவித சம்பந்தமுமில்லை.

ஃ

க. பிள்ளை, கொழும்பு 11

கே: திருமணப் பெண் மணமேடையில் மாப்பிள்ளையின் இடது பக்கம் இருப்பது சரியா? வலது பக்கம் இருப்பது சரியா?

ப: தாலி கட்டும்வரை வலது பக்கமும் தாலி கட்டிய பின் இடது பக்கமும் தான் இருப்பாட்டி வைக்கிறார்கள். இதுதான் முறை போலும். கர்த்தர் ஆதாமின் இடது பக்கத்து விலா எலும்பைப் பெயர்த்து ஏவாளைச் சிருஷ்டித்தார். [illegible] இடது புறம் ஒட்டிக் கொண்டு இருப்பது தான் சரி. இரண்டு மனைவியர் அல்லாது ஒரு தாரத்தினை மட்டும் கொண்ட கடவுளர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் வாமபாகத்தில் தானே தம்மனைவியரை உட்கார வைத்துக் 'போட்டோ' பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஃ

ஜெயரட்ணம், பாழ்ப்பாணம்

கே: திருமதி குயுக்தியாரும் அழகுராணிப் போட்டியில் கலந்து கொண்டார் என்று கேள்விப்பட்டேன். உண்மையா?

ப: தவறு அவர் அழுகைராணிப் போட்டி யென்றால் தான் கலந்து கொள்வார். நிச்சயம் முதற்பரிசையும் தட்டிக் கொள்வார். அழுது அழுதுதானே என்னிடம் காரியங்களைச் சாதித்து வருகிறார். அந்தப் பயிற்சி போதுமே பரிசுபெற.

ஃ

வை. சுப்பிரமணியம், குண்டசாலை.

கே: மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாமா?

ப: அரசியல் போதனையை ஏற்கலாம்; சாதனையில் இறங்கிவிடக்கூடாது. மாணவர் அரசியல் படிக்கவே கூடாது என்று சிலர் அறியாமையினால் கூறுகிறார்கள். அப்படியானால் திருக்குறள் கூடப்படிக்க முடியாமல் போய்விடுமே.

ஃ

என். பி. ஒபே, புத்தளம்

கே: குயுக்தியாரே தங்களுக்கு சகுனத்தில் நம்பிக்கை புண்டா?

ப: இதுவரை இருந்ததில்லை. ஆனால் யு. என். பி. யின் வீழ்ச்சியைப் பார்த்த பின் சகுனம் என்று ஒன்று இருக்கலாமோ என்று சந்தேகம் பிறக்கிறது. யு. என். பி. தலைவர் ஜூலைத் தேர்தலுக்கான முதல் பிரசாரக் கூட்டத்தை ஆரம்பிக்கு முன் தேவந்துறையிலுள்ள விஷ்ணு ஆலயத்துக்குச் சென்று ஆராதனை நடத்திய போது அவர் அடித்த மூன்று தேங்காய்களும், அழுகலாகவும், ஒல்லியாகவும், உடைசலாகவும் போயின. கெட்ட சகுனம் என்றார்கள். முடிவு அப்படித்தான் ஏற்பட்டு விட்டதே!

ஃ

'மதியமுதன்', சிற்றுண்டி

கே: மலர்ந்து மூடிய மலர், மணந்து வாடிய மங்கை இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

ப: சூடுவார் இல்லை; நாடுவார் இல்லை. இதுதான் வித்தியாசம்.

ஃ

முல்லைத்தேவி, கொச்சிக்கடை

கே: பெண்மணிகளை மலருக்கு ஒப்பிட்டால் ஆண்களை எதற்கு ஒப்பிடலாம்.

ப: மலரைக் காக்கும் முள்ளுக்கும், மலரைத் தாக்கும் முள்ளுக்கும் ஒப்பிடலாம்.

ஃ

இ. சதாசிவம், வட்டுக்கோட்டை

கே: தமிழை தேவந்துறை வரை நிலைநாட்டப் போகும் திரு. ஜீ. ஜீ. தமிழினை இனி எங்கு நிலை நாட்டுவார்?

ப: நடுத் தெருவில்!

"மோட்டார் உபாத்தியாயர்"
ட்ரைவிங் மெக்கானிக்கர் சின்னல் தமிழ்ப் புத்தகம்.
மோட்டார் உபாத்தியாயர்
ரூபா 5/- வி. பி. பி. மூலம் அனுப்பிவைக்கமுடியும்,
JANAKA PUBLISHERS,
PANADURA.

ஆரோக்கியாமிருதலேஹம்
S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET, COLOMBO 13

ரெமிங்டன் தமிழ்
டைப்ரைட்டரில் தமிழ் வாசகம் முழுவதையும் கையெழுத்துப் போலவே வெகு வடிவாக டைப் செய்யமுடியும்.



வேகமாக டைப் செய்வதற்கு வசதியாக தமிழ் எழுத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் டைப் செய்யத் தெரிந்தவர்க்கு ஆங்கிலத்திலிருந்து மாறி தமிழில் டைப் செய்வதும் சுலபம்.

தமிழில் டைப் செய்வது சுலபம்



ஸ்டான்டர்டு (பெரியது)
போர்ட்டபிள் (சிறிது)
இரண்டு மாதிரிகளும் கிடைக்கும்.

Remington Rand
Post Box 788
294, Union Place,
COLOMBO-2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் மொழிப் போர்! 3-வது கட்டத்தில்!!

## 1938-ல் தாளமுத்துவும் நடராஜனும் சிறையில் பலி

## 1948-ல் நிறை கர்ப்பவதி கடத்தப்பட்டு காட்டில் தவிக்கவிடப்பட்ட கொடுமை

## இறுதியில் கிடைத்தது வெற்றிதான்

### ஆகஸ்ட் போர் பற்றி எல்லோருக்கும் நம்பிக்கை

மொழிப் போராட்டம் தமிழகத்துக்குப் புதியதுமல்ல; புதுமையானதும் அல்ல. உத்தேச இந்தி எதிர்ப்பு அறப் போராட்டத்தை (ஆகஸ்ட் 31-ல்) துவக்கி முன்னின்று நடத்தவிழையும் தி. மு. கழகத்தவர்கள் இது விஷயத்தில் நன்கு பழக்கப்பட்டவர்கள். அவர்கள் அடிபட்டிருக்கிறார்கள்; உதைபட்டிருக்கிறார்கள்; அடக்கி ஒடுக்கப்பட்டுமிருக்கிறார்கள். இம் மட்டல்ல; மொழிப் போராட்டத்தில் தி. மு. கழகத்தினர் இரத்தம் சிந்தியிருக்கிறார்கள்; தமது வீரர்களைப் பலி விட்டுமிருக்கிறார்கள்.

ஆகவே போராட்டம் என்று ஒன்றைத் தொடங்கி விட்டால் என்ன நடக்கும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். அதனாலேயே திரு சி. என். அண்ணாத்துரை தமிழகத்தில் தினவெடுத்த தோள்களோடு போராட்டத்தில் குதித்துவிடத்துடித்துக்கொண்டிருக்கும் தோழர்களுக்கும் தோழியர்களுக்குமெல்லாம் பின்வருமாறு அறைகூவல் விடுத்திருக்கிறார்:-

#### அண்ணா அறை கூவல்

"நடக்கப் போகின்ற போராட்டத்தில் இரண்டு கைகளோடு போகக்கூடியவர்கள் ஒரு கையோடு திரும்பலாம். இரண்டு கால்களோடு களத்துக்குச் சென்றவர்கள் ஒரு கால் முறிந்து திரும்பலாம். இரண்டு கண்களோடு சென்றவர்கள் காங்கிரஸ் ஆட்சியாளர்களால் ஒரு கண் அழிக்கப்பட்டுத் திரும்பலாம். இவைகளையெல்லாம் தாங்கக் கூடியவர்கள், அவர்கள் கல் எறிகிறார்களே என்று சொல்வது சரியல்ல. 'கட்டாய இந்தியை எதிர்ப்பேன், எதையும் தாங்கும் இதயம் எனக்கு உண்டு' என்று இந்தி எதிர்ப்பு அறப் போர் வீரர் பட்டியலை நீண்டதாக்குங்கள்" இப்படித் திரு அண்ணாத்துரை கூறியிருக்கிறார்.

#### வெற்றிதான் கிடைத்தது

மொழிப்போராட்டத்தில் இறங்கிவிட்ட பின்னர் தமிழர்கள் துவண்டதாக வரலாறு இல்லை. முன்னின்று நடத்திய தி. மு. கழகத்தினர் இன்னல் தாங்காது ஓட்டம் பிடித்ததாகவும் சரித்திரம் இல்லை. எதையும் தாங்கும் இதயத்தோடு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு குலையாமல் உறுதியாக நின்று கடைசிவரை போராடியதாகவே சரித்திரம் இருக்கிறது. சித்திரவதைப் பட்டபோதிலும், சிறையில் கிடந்து 'செத்த' போதிலும் அவர்களில் எவராவது இலட்சியத்தைக் கைவிட்டார்கள் இல்லை. இதன் பலன், நடத்திய போராட்டங்களில் வெற்றி. வெற்றியே தவிரத் தோல்வி இல்லை.

#### இரண்டில் ஒன்று முடிவு தெரியும்

தமிழ் நாட்டில் இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதை எதிர்த்து இதுவரை இரண்டு தடவைகள் போராட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இனி இம் மாதம் 31-ந் தேதிக்குப்பின் நடக்கப்போவது மூன்றாவது போர். முழு மூச்சாக நடக்கப்போகிறது. "தமிழகத்தின் இறுதியான மொழிப் போர் இதுவாகத்தான் இருக்கும். இரண்டில் ஒன்று முடிவு தெரியும்" என்று இந்தி எதிர்ப்பு அறப் போராட்டக் குழுத் தலைவர் திரு ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அறிவித்திருக்கிறார்.

#### முதலாவது இந்திப்போர்

இந்தி தமிழகத்தில் கட்டாய பாடமாகப் புகுத்தப் படுவதை எதிர்த்து முதல் போராட்டம் நடந்தது 1938-ல் அதாவது ராஜாஜி மந்திரிசபை அமைத்து சென்னை நிர்வாகத்தை நடத்திய காலத்தில். இன்று இந்தி தமிழகத்தில் புகுத்தப்படுவதைத் தீவிரமாக எதிர்ப்பவரும் தி. மு. கழகம் நடத்தப்போகும் எதிர்ப்பு அறப்போராட்டத்துக்கு மெத்த ஆதரவு அளித்து ஊக்குவித்து வருபவருமான ராஜாஜி அன்று யாரும் இந்தி வெறி கொள்ளாத 1938-ல் தமிழ் நாட்டில் இந்தியைப் புகுத்தினர்.

#### ராஜாஜியின் கட்டாய இந்தித் திட்டம்

அவர் கொண்டுவந்தது கட்டாய இந்தித் திட்டம். இலங்கையில் இப்போது அரசாங்க ஊழியர்கள் தாம் பதவி ஏற்ற மூன்று ஆண்டுக் காலத்தில் சிங்களத்தில் தேர்ச்சி பெறவிட்டால் அவர்களுக்கு ஒன்றில் சம்பள உயர்வு ஒன்றும் கிடையாது, அல்லது உத்தியோகம் பறிபோகும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது அல்லவா? அதுபோலத்தான் இருந்தது ராஜாஜி கொண்டுவந்த இந்தித் திட்டமும். பாடசாலைகளில் 5-ம், 6-ம், 7-ம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் இந்தியில் தேறவிட்டால் மேல படிப்புக்குச் செல்ல முடியாது என்று ராஜாஜி உத்தரவு போட்டார். தாம் முதன் முதலாகச் சென்னையில் அரசாங்கத்தை ஏற்று நடத்திய (14-7-1937) ஆண்டிலேயே இந்த உத்தரவையும் பிறப்பித்தார்.

#### கழகத்துக்கு வீரர் கிடைத்தார்

இதே உத்தரவு தி. மு. கழகத்துக்கு ஒரு சிறந்த வீரரை அளித்தது. இன்று தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளராக இருக்கும் திரு. என். வி. நடராசன் காங்கிரஸிலிருந்து விலகித் தன்மான இயக்கத்தினரோடு தோளோடு தோள் நின்று இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட விழைந்தார்.

தமிழகம் திரண்டது. பெரியாரின் தலைமையில் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டது. தன்மான இயக்கத்தினராக நீதிக் கட்சியினராகத்தான் இன்றைய தி. மு. கழகத்தினர் அன்று இருந்தார்கள். பெரியாரின் ஆணையை ஏற்று நடந்தார்கள். (தி. மு. கழகத்தினர் பெரியாரோடு கருத்துவேற்றுமை கொண்டு தி. மு. கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்தியது 1948-ல் தான்)

#### பெரியார்கள் ஆதரவு

இந்தப் போராட்டத்துக்கு மறைந்த தமிழ்க்கடல் மறைமலை அடிகளார், நாவலர் சோமசுந்தரபாரதியார், பேராசிரியர் மயிலை—சிவ முத்து, தமிழ்ப் பெரியார் வி. க., திருச்சி தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம், ஜனாப் கலிபுல்லா சாகிப் முதலான பெரியார்கள் பூரண ஆதரவளித்தார்கள்.

#### சிங்கம்

இந்தி எதிர்ப்பு மகாநாடுகளில் உணர்ச்சிமிக்க சொற்பொழிவுகள் நிகழ்த்தி மக்களை அறப்போருக்குத் தயார் செய்தார்கள்.

#### மாதர்கள் பங்கு

இந்தப் போராட்டத்துக்கு தமிழகத்து மாதர் திலகங்கள், அளப்பரிய பணி ஆற்றினார்கள். படை நடத்திச் செல்லவும் அவர்கள் தயாரானார்கள். குறிப்பாக மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத் தம்மையார், டாக்டர் தருமாம்பாள், மீனாம்பாள் சிவராஜ், நீலாம்பிகை அம்மையார், வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார், மலர் முகத்தம்மையார் முதலானோர் இந்தி எதிர்ப்புப் போரில் பெரும் பங்கு கொண்டார்கள்; சிறைக்கும் அவர்கள் சென்றார்கள்.

#### துறவிகளும் களத்தில்

இவர்கள் மட்டுமல்ல; துறவுபூண்டிருந்தவர்களும் தமிழுக்கு ஆபத்து என்றதும் போர்க்கொடி உயர்த்தினர். அவர்களுள் [illegible] அருணகிரிநாதர், சண்முகானந்த சாமிகள் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1938 இந்தி எதிர்ப்பு அறப்போரின் அங்கங்களாகக் கண்டன மாநாடுகள், மறியல்கள், உண்ணாவிரதங்கள் நடைபெற்றன. இவற்றின் முதல் விளைவு? அடக்குமுறை; அடிதடி; சிறைவாசம்; சாவு இத்தியாதி.

#### தாளமுத்துவும் நடராஜனும் பலி

தலைவர்கள் உட்படச் சிறையில் அடைபட்டுக் கிடந்தவர்களுள் செத்தவர்கள் இருவர் தாளமுத்துவும் நடராஜனும். அவர்களின் பரிதாப மரணம் பற்றித் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் திரு. என். வி. நடராஜன் பின்வருமாறு எழுதுகிறார்:—

"ஏழைக் குடும்பத்தில் பிறந்த நடராசன்—தமது தாய் தந்தையரைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பிலிருந்த வீர இளைஞன். சிறையில் நோய்வாய்ப் பட்டிருந்த நேரத்தில், 'மன்னிப்புக் கேட்டால் விடுதலை செய்து விடுகிறோம்' என்று ஆச்சாரியார் (ராஜாஜி) கேட்க, அந்தத் தாழ்த்தப்பட்ட குடியில் பிறந்த வீரத் தமிழ் மகன் தமது உயிரைவிடத் தமிழ் மொழியே பெரிது என்று சொல்லி மகோன்மத்தர்களின் ஆணவத்துக்கு இணங்காமல் சிறையிலேயே மறைந்தார்.

"அதுபோன்றே பெண்டு பிள்ளைகளுடைய குடும்பத்தை தாளமுத்துவும்நோய் வாய்ப்பட்டிருந்த நேரத்தில் மன்னிப்புக் கேட்குமாறு ஆச்சாரியார் (ராஜாஜி) ஆட்சியால் வற்புறுத்தப்பட்டும் இணங்கினாரில்லை. ஆதலின் வீரத் தாளமுத்துவும் சிறையிலேயே மாண்டார்.

"அவ்விரு வீரர்களதும் சவ ஊர்வலத்தின் போது சென்னையே அழுதது."

அழுத கண்ணீர் வீண் போகவில்லை. சிந்திய இரத்தம்—பட்ட இன்னல் நாட்டுக்கு நல்லது செய்யாமல் இல்லை. உயிர்ப்பலி உருப்படியான நன்மை செய்யாமல் இல்லை. ஆம், கடைசியில் போராட்டம் வென்றது. இன்றைய தி. மு. கழகத்தினர் அன்றைய நீதிக் கட்சியில் இருந்து நடத்திய போராட்டம் அது.

#### இரண்டாவது மொழிப் போர்

இரண்டாவது இந்திப் போர் தி. மு. கழகம் தோன்றிய 1948-ம் ஆண்டு திரு அண்ணாத்துரை தலைமையில் தொடுக்கப்பட்டது.

அப்போது நடந்தது ஓமந்தூரார் ஆட்சி. கட்டாய

(13-ம் பக்கம் பார்க்க)

#### கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் வாபஸ்

இந்திய ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத்தின் தமிழ் நாட்டு விஜயத்தின் போது (6.8 60—16.8.60) அவரது இந்தித் திணிப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக அன்னாருக்குக் கறுப்புக் கொடி காட்டுவது என்ற தனது முடிவைக் கடைசி நேரத்தில் தி. மு. கழகம் வாபஸ் பெற்றது.

இந்தி எதிர்ப்பு அறப் போராட்டத் தலைவரும் எம். பியுமான திரு. ஈ. வெ. கி சம்பத் விளக்கம் கேட்டு எழுதிய கடிதத்துக்கு, பிரதமர் நேருவிடமிருந்து தமது பழைய உறுதி எப்படியும் காப்பாற்றப்படும் என்றும், ஆட்சிமொழிக்கொள்கை நல்லபடியாக வகுக்கப்படும் என்றும் புதிதாக உறுதி கூறும் கடிதமொன்று உடனுக்குடன் கிடைத்ததைத் தொடர்ந்து தி. மு கழகமேலிடம் தனது முந்திய முடிவை வாபஸ் பெற்றது.

## மக்கள் குரல்

#### மாத்தளை மத்திய பஸ் நிலையம்

மாத்தளை நகர பஸ் நிலையத்தை விஸ்தரிக்க வேண்டுமென பலகாலம் பலதடவை நகர சபைக்கு எடுத்துக் கூறினோம். பலவிலை பல பத்திரிகைகளில் எழுதினோம். பல துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோம் ஒன்றும் நடந்தபாடில்லை.

நகரின் மத்திய பகுதியிலுள்ள பழைய நிரந்தர விசாலமான பஸ் நிலையத்தில், பஸ்களை நிறுத்தி தம்போது ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பது நகரசபையின் பொறுப்பாகும்.

நகரின் மத்திய பகுதியிலுள்ள கொல்தாவலை பஸ் நிலையத்தில் பஸ்களை நிறுத்தினால் வெளியூர் ஜனங்கள் பலர் நகரின் பல பாகங்களுக்கும் பிரிந்து செல்ல வசதியாயிருக்கும் விபத்துக்களும் பெருமளவில் தடுக்கப்படும்.

எனவே நகர பெருமக்களின் நலன் கருதி மத்திய பகுதி கொல்தாவலை பஸ் நிலையத்தில் பஸ்களை நிறுத்தி ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணிவுடன் வேண்டுகிறேன்.

—ஏழை மக்கள் நண்பன், மாத்தளை.

#### மூதூராரின் விணுரை

3-8-60-ந் தேதியன்று மூதூர் 2வது பிரதிநிதி ஜனாப் ஏ. எல். மஜீத் தர்கா நகரில் சொற்பொழிவாற்றுகையில் சமஷ்டியும் சமஷ்டியும் இலங்கைக்கு உகந்ததல்லவென்று கூறியிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது. ஒரு தமிழ் பேசும் பிரதிநிதியே இவ்விதம் கூறுவது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்.

தமிழ் மொழி முஸ்லிம்களின் தாய்மொழி. இதைப் பிரதிநிதி மறந்து பேசியிருப்பது வேடிக்கைதான்!

முஸ்லிம்கள் தங்களது மொழி மத, இனப் பண்பாடுகளை இன்றைய ஒற்றையாட்சித் திட்டத்தில் காப்பாற்ற முடியாது, சமஷ்டி ஆட்சி ஒன்றில் மட்டுமே அவைகளைப் பேண முடியும் என்பதை நன்குணர்ந்து விட்டனர்.

—எம். மீராசா, மூதூர் (12).

#### மறைந்த விலையில் ஆட்டிறைச்சி

பொதுமக்கள் குறைந்த விலையில் ஆட்டிறைச்சி வாங்க வேண்டுமென்பதற்காக கொழும்பு முனிசிப்பல் சபை இந்தியாவிலிருந்து விமான மூலம் நேரடியாகத் தருவித்து முனிசிப்பல் மார்க்கட்டுகளில் விற்கும் ஆட்டிறைச்சியிலும் கள்ளத்தனம் நடைபெறுகிறது. விமானமூலம் இலங்கை வந்திறங்கும் இவ்விறைச்சி முனிசிப்பல் மார்க்கட்டுகளுக்கு கொண்டு வரப்படுகிறது. பொதுமக்களும் எதிர்

(13-ம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தி முனையில் குழந்தையைக் காப்பாற்றிய மாணவர் செல்வரத்தினம்

## ஓடும் ரயிலில் முரடனோடு கடும்போர் இந்தியாவில் நள்ளிரவில் இது நடந்தது

## தூக்கப் பிடிக்க முடியாது முனகியபடி வெளியே விழுந்து செத்தொழிந்தான்

## இரத்தத்தோடு ஊறிய பண்பால் அவர் ஈழத்துக்கு தேடித்தந்த பெருமை



இலங்கை மாணவர் செல்வரத்தினத்தின் தீரச் செயலுக்காக ராஜாஜி அவரைப் பாராட்டினர். ராஜாஜியுடன் மாணவர் செல்வரத்தினமும் குழந்தை கிருஷ்ணகாந்தியும் அதன் தாயும் தந்தை வேங்கடராமனும காணப்படுகின்றனர்.

ஓடும் ரயில், அதிலே ஒரு கரிய உருவத்தின் திடும் பிரவேசம்! அந்த ரயிலில் பிரயாணம் செய்யும் ஒரு அபலைப் பெண்ணுக்கோ அல்லது பச்சைக் குழந்தைக்கோ ஆபத்து! உடனே கதாநாயகனின் புலிப்பாய்ச்சல்! கரிய உருவத்துக்கும் கதாநாயகனுக்கும் கைகலப்பு; கத்தி வீச்சு; ஜீவமரணப் போராட்டம்...........

இப்படியான மயிர்க்கூச்செறியும் சம்பவங்களை நாம் டிடெக்டிவ் படங்களில்தான் பார்த்திருப்போம்; துப்பறியும் கதைகளில்தான் படித்திருப்போம். ஆனல் ......

இத்தகைய ஒரு சம்பவம், தீர வீரச் செயல்கள் நிறைந்த சம்பவம், நிஜ வாழ்வில் நடைபெறுவது அசாத்தியம் என்று தான் பலர் நினைக்கிறுர்கள். ஆனல்!.....



குழந்தை கிருஷ்ணகாந்தி தனது சகோதரனுடன் இருக்கிறது. முரடன் கையில் சிக்கிய 'சிவகாரக் கிளி' இதுதான்.

### உண்மைச் சம்பவம்

இத்தகைய சம்பவம் ஒன்று சமீபத்தில் உண்மையாகவே நடந்திருக்கிறது. தென்இந்தியாவில் திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் ரயில் வண்டியில் நடைபெற்றிருக்கிறது. அதில் சம்பந்தப்பட்ட ஒரு மாணவர், தீரச் செயல்களைப் புரிந்த வாலிபர், தன் பராக்கிரமத்தினால் ஒரு பச்சிளங் குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய இளைஞர் ஈழத் திருமண்ணில் பிறந்த ஒரு வீரப் புதல்வர் என்னும் போது ஒவ்வொரு இலங்கையனும், இறும்பூதெய்தாமல் இருக்க முடியுமா?

### செல்வரத்தினம்

மாணவர் செல்வரத்தினம் யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்தவர். வயது 18-த்தான் ஆகிறது. இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பி, கொழும்பு வந்திருக்கிறர் என்று தெரிந்ததும் சுதந்திரன் காரியாலயத்துக்கு அவரை அழைத்திருந்தோம். அவர் பெற்ற அனுபவத்தை அவர் வாய்மொழியாகவே சுதந்திரன் வாசகர்களுக்கு வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம்.

மாணவர் செல்வரத்தினம் கூறியதாவது:

"நான் பல துப்பறியும் நாவல்களைப் படித்திருக்கிறேன். அவற்றில் சில சமயம் பயங்கர மனிதன் தோன்றுவான். அவன் எப்படித் தோன்றினன், எப்படி மறைந்தான் என்பது மர்மமாக இருக்கும். படிக்க ரஸமாக இருக்கும்.

"என் வாழ்விலும் எப்போதாவது ஒரு மர்ம மனிதன் குறுக்கிடுவான். அவனோடு நான் பொருதுவேன்; சண்டை பிடிப்பேன்; அவன் உயிரைக் குடிப்பேன் என்று நான் ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை.

### ரயிலில் பிரயாணம்

"கடந்த ஜூன் மாதம் 21-ந் தேதி திருநெல்வேலியிலிருந்து புறப்படும் 3-30 கடுகதிப் புகைவண்டியில் திருச்சியை நோக்கிப் பிரயாணமானேன். நான் பிரயாணம் செய்த அதே இரண்டாம் வகுப்பு பெட்டியில் இந்திய ரிசேர்வ் வங்கி இந்தூர் கிளையைச் சேர்ந்த திரு. வேங்கடராமனும் அவர் மனைவியும் மூன்று குழந்தைகளும் பிரயாணம் செய்தனர். அவர்களோடு இன்னொருவரும் கூடப் பிரயாணம் செய்தார்.

"வண்டி மதுரையைக் கடந்ததும் இராச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஒவ்வொருவரும் படுக்க இடம் பார்த்தோம்.

"நான் கீழே உள்ள சீற்றில் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டேன். திருமதி வேங்கடராமன் சுமார் மூன்றரை வயதான தமது மூத்த பெண்குழந்தையை தரையில், அதாவது எனது சீற்றுக்கும் மறு சீற்றுக்கும் இடையில் படுக்க வைத்துவிட்டு, மற்ற இரு குழந்தைகளையும் தன்னேடு அணைத்துக்கொண்டபடி எதிர்ப்புற சீற்றில் படுத்தார்கள். திரு. வேங்கடராமன் எனக்கு மேலேயுள்ள தொங்கு பலகையில் படுத்துக்கொண்டார் மற்றப்பிரயாணியும் அந்த அம்மாளின் சீற்றுக்கு மேலேயுள்ள பலகையில் படுத்துவிட்டார்.

### கரிய உருவம் தெரிந்தது

"லைட்டுகள் அணைக்கப்பட்டிருந்தன. ஆனலும் நடைபாதையிலும், பக்கத்து கம்பார்ட்மெண்டிலுமிருந்து வந்த வெளிச்சம் மங்கலாக ஒளி தந்து கொண்டிருந்தது. இரவு 11 மணியளவில் நான் இலேசாகத் தூக்கம் கலைந்து எனது கைக்கடிகாரத்தைப் பார்க்க முயன்றேன்.

"அப்போது...........

"பயங்கரமாகத் தோற்றமளித்த ஒரு கரிய நெடிய பரட்டைத் தலை உருவம் அங்கு நடமாடுவது தெரிந்தது!

"எனக்குத் திக்கென்றது.........

"ஒரு கணம் அமைதியாக என்ன நடக்கிறது என்று பார்த்தேன். குழந்தை விழித்துக் கொண்டது போலும், அரவங்காட்ட முற்பட்டது போலும் தோன்றியது. ஆனல் மறுகணம்...........

### குழந்தை வெளியே வீசப்பட்டது

"மறுகணம் அந்தப் படுபாதகமான பயங்கரச் செயல்...... இரக்கமற்ற கொரூரச் செயல்......நடைபெற்றது! தடுக்க முடியாதபடி நடந்தேவிட்டது!

"ஆம், திருட்டு வெறி பிடித்த அந்தப் பயங்கர உருவம், சீற்றுக்கு இடையில் படுக்க வைத்திருந்த குழந்தையை, தூக்க நிலையில் அப்படியே அலக்காகத் தூக்கி திறந்திருந்த கதவின் வழியாக வெளியே வீசி எறிந்துவிட்டது!

### நெஞ்சு பதைத்தது

"வளைத்து விடுத்த வில்லைப் போல் துடித்து எழுந்தேன். குழந்தையை வீசியதைக் கண்டதும் என் நெஞ்சம் பதை பதைத்தது. ஆவேசம் ஏற்பட்டது போன்ற ஒரு உணர்ச்சி உதயமாயிற்று. என்ன செய்வேன்—என்ன ஆகும் என்ற நினைவே எனக்கு எழவில்லை. ஆனல் பத்துப் பேரின் பலம் என்னுள் புகுந்து கொண்டது போல் ஒரு வேகம் பிறந்தது.

"அந்தக்கரிய உருவத்தின் கையிலே ஒரு பளபளக்கும் கத்தி இருந்தது என் கண்ணிலபட்டது. ஆனல் அதன் பயங்கரத் தன்மை என் கருத்தில் பதிவாகவில்லை.

### புயத்தில் கத்திக்குத்து

"ஒரே தாவாக அந்த உருவத்தின் மீது தாவினேன். மறு நொடியில் அந்தக் கத்தி என் கழுத்தை குறி நோக்கி வீச்சாக வந்துகொண்டிருந்தது மங்கலாகத் தெரிந்தது. அப்போது......

"அப்போது என் இடது கரத்திஞல் கத்தியோடு

(9-ம் பக்கம் பார்க்க)



தமது உயிரை ஒரு பொருட்டாக மதியாது முரடனேடு பொருதி அவனை முடிவு கட்டிக் குழந்தையையும் காப்பாற்றிய மாணவர் [illegible] குழந்தையுடன் இங்கு காணப்படுகிறார். [illegible] கன்னத்திலும் காயங்கள் இருப்பது தெரிகிறதல்லவா?

## சங்கப் பலகை

### இந்தி தான் ஆட்சிமொழி!

எழுதியவர்: எ. கலைமுகிலன். வெளியீடு: எம். எம். சிங்கம் பதிப்பகம், சென்னை-29. விற்பனை: தமிழ் பண்ணை, யாழ்ப்பாணம். விலை 25 காசு.

"வங்கம் பொங்கி எழுகிறது, இந்தி வேண்டாமென்று! குஜராத்தியினர் கொதித்தெழுகின்றனர், இந்தியா என்று! மராட்டியும் மார்தட்டி எழுகிறது, போர்க்குரல் கொடுத்து! தென்னகமோ விண்ணதிர வீரமுரசு கொட்டுகிறது வேண்டாமென்று!...." என்ற குமுறலோடு ஆரம்பிக்கிறது இச் சிறு நூல். நூலாசிரியர் இருபது இருபத்தைந்து வருடங்கள் பின்னோக்கிச் சென்று அன்று நடந்தவற்றையும் கூறி இந்தியை பிறமொழி பேசுவோரிடம் திணிப்பது நியாயமே இல்லை என்று புள்ளிவிபர ஆதாரங்களோடு அழுத்திக் கூறுகிறார்.

### கலைமதி ஆண்டு மலர்

இம்மலரில் கருத்தாழம் நிறைந்த கட்டுரைகள் பல உண்டு. சிந்தனையைக் கிளறிவிட வல்ல கட்டுரைகளும், இருப்பித் திருப்பிப் படிக்கவல்ல புதிய புதிய கருத்துக்களைக் கிறி ஓடும் கட்டுரைகளும் ஏராளம். உதாரணத்துக்கு பண்டிதமணி, வ. கந்தசாமி, ப. சந்திரசேகரம் போன்றோரின் சிறந்த கட்டுரைகளைக் குறிப்பிடலாம். மலருக்கு மணம் தர கட்டுரைகள் தாம் முன்னுக்கு நிற்கின்றன. அதோடு முடியவில்லை. சுவைத்துப் படிக்கக் கூடிய சொல் நயம் பொருள் நயம் நிறைந்த கவிதைகளும் உண்டு.

சிறு கதைகள் எண்ணிக்கைக்கு எட்டு இருந்தால் போதுமா? சிறு கதைகள் என்ற தலைப்புத் தாங்கியவை எல்லாமே நல்ல கதைகளாகி விடுமா?

வரதர் சில காலத்துக்கு முன்னர் கற்புக்கு ஒரு புரட்சிக் கருத்தைக் கூறி ஒரு சலசலப்பை உண்டு பண்ணினுர். அந்தக் கருத்தைத் தொட்டுக் கொண்டு கற்புக்குப் புதிய கோலம் தருகிறது ஒரு கதை. கற்பை நிர்வாணக் கோலத்திலேயே நிறுத்தி விடுகிறது இன்னெரு கதை. முற்போக்கு கற்பு கோபுரம் ஏறி பிற்போக்கு உயிர் நிலை கலங்கி குப்பை மேட்டை நாடுகிறது. ஒன்று முதற் கதை. மற்றது கடைசிக் கதை. இரண்டுமே பரவாயில்லை.

வரதர் ஒரு புதிய கோணத்தில் இருந்து மனித சமுதாயத்தை காணுகிறார். வாழ்வுக்கு ஒவ்வாத அற்பக் கொள்கைகளை அழிக்க வேண்டும் என்ற தாகம் கதையில் பரிமளிக்கிறது. ஆனல் பழைய 'வேகம்' எங்கே?

'காதல்' என்ற கதை பின்னல் பழுத்து ஆகாசக் கற்பனையின் நாளையும் பொழுதையும் கரைக்கும் [illegible] றைய வாலிபர்களுக்கு [illegible]

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரஹெரா தமிழ் விழா! 'பிரகாரம்' என்ற சொல்லிலிருந்து வந்தது

## தமிழர்களால் ஆரம்பிக்கப்பட்டது

### பவனியின்போது எடுத்துச் செல்லப்படும் 'தலக்கோல்' பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது

ஏறக்குறைய 1680-ம் ஆண்டளவில் மலைத் தலைநகரில் கொண்டாடப்பட்ட கண்டி பெரஹெரா பற்றி நேர்மையானதும் வாசிக்கத் தூண்டுவதுமான வர்ணனை நொக்ஸ் (Knox) என்பவரின் "இலங்கை சரித்திரத் தொடர்பு" (Historical Relation of Ceylon—Glascow Edition) 125—127 வரையுள்ள பக்கங்களில் தரப்பட்டிருக்கிறது.

நொக்ஸ் கூறுகிறபடி பார்த்தால் கண்டிப் பகுதிகளில் புனித விழாக்கள் இரண்டு, வருடாந்தம் கொண்டாடப்பட்டிருக்கின்றன. ஒன்று பூமியைப் பரிபாலிக்கும் தேவர்க்கும் இந்த உயிர் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களுக்கும் உரியது. மற்றது ஆத்மாவையும் மனிதனது நலனையும் பாதுகாக்கும் "புது" கடவுளுக்கு உரியது. நொக்ஸ், பெரஹெராவை உபவிழுய விழாக்கள் வகையருவைச்

எஸ். ஜே. குணசேகரம்

சேர்ந்தது என்கிறார். அதாவது கடவுளர்களின் உதவியையும் அனுக்கிரகத்தையும் பெறுவதற்குச் செய்யப்படும் விழா என்கிறார்.

தொக்ஸினுடைய காலத்தில் பெரஹெரா ஜூன் ஜூலை யாத முற்பகுதியில் அமாவாசைத் தினத்தில் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. இது ஒரு புனித விழாவாகவும் பொதுக் கூட்டமாகவும் இருந்த போதிலும் யாரும் அதற்குப் போக வேண்டும் என்று வற்புறுத்தப்படவில்லை. சிலர் ஒரு கேடகத்துக்கு (Pagoda) சென்றார்கள். இன்னும் சிலர் வேறு சிலவற்றுக்குச் சென்றார்கள். ஆயினும் மிகப் புனிதமான விழா கண்டி நகரிலேயே நடத்தப்பட்டதாக நொக்ஸ் கூறுகிறார்.

#### வர்ணம் பூசிய தடி

தெய்வத்தன்மை வாய்ந்தது என்று வணங்கப்பட்டது வர்ணம் பூசிய தடி. இதில் மலர்கள் தொங்கவிடப்பட்டிருக்கும். பட்டுத் துணியால் சிறிது பாகம் சுற்றப்பட்டிருக்கும். மக்கள் தலை குனிந்து இந்தத் தடியை வணங்குகிறார்கள். ஒவ்வொருவரும் காணிக்கையும் செலுத்துகிறார்கள். காணிக்கையை வாங்கிய பின்னர் குருவானவர் வர்ணம் பூசிய தடியைத் தமது தோள்மீது தூக்கி வைத்துக் கொள்வார். அவரு[illegible] வாய் துணியால் கட்டப்பட்டிருக்கும். அதாவது புனித தடியைக் குருவானவரின் மூச்சு அசுத்தப்படுத்தாமல் இருப்பதற்கு இந்த வாய்க் கட்டுப் போடப்படுகிறது. பின்னர் வெள்ளைத் துணி போடப்பட்ட ஒரு யானையில் ஏறி அந்தக் குருவானவர் ஆரோகணித்துக் கொண்டு ராஜ கம்பீரத்தோடு நகர் வீதிகள் வழியாகப் பவனி வருவார். அவருக்கு முன்னால் ஒரு நாற்பது ஐம்பது யானைகள் செல்லும். அவற்றில் பித்தளை மணி கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். யானைகள் நடந்து செல்லும் போது இரு பக்கங்களிலும் தொங்கும் மணிகளிலிருந்து மணியோசை கேட்கும்.

#### பவனியில் இரண்டாவது படி

இரண்டாவது படியாக ராட்சதர்கள் போல உடையணிந்த சில மனிதர்கள் செல்வார்கள். இவர்களுக்குப் பின்னால் திரளாகச் செல்வார்கள் பறையடிப்பவர்கள். குழலூதிகள் பின் தொடர்வார்கள். அவர்களுக்குப் பின்னால் பலர் நடனமாடிக் கொண்டு செல்வார்கள். அடுத்தபடியாகக் கேடக சேவைக்கு வேண்டிய எல்லா ஜாதிகள், துறைகளைச் சேர்ந்த பெண்கள் செல்வார்கள். இவர்களுக்குள் மட்பாண்டத் தொழில் செய்யும் பெண்களும் சலவைத் தொழில் செய்யும் பெண்களும் மும்மூன்று பேர் கொண்ட குழுக்களாக வரிசைக் கிரமப்படி செல்வார்கள். இவர்களுக்கிடையில் பறையடிப்பவர்களும் குழலூதிகளும், நாட்டியக்காரரும் செல்வார்கள்.

#### மூன்று கடவுளர்கள்

வர்ணம் பூசிய தடியைத் தாங்கிச் செல்லும் குருவானவருக்கு வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் மிக நெருக்கமாக சுமார் ஒரு யாருக்கு உட்பட்ட தூரத்தில் இன்னும் இரண்டு குருமார் தாமும் யானை மீதிருந்து செல்வார்கள். இவர்களில் ஒருவர் கதிர்காமக் கடவுளின் பிரதிநிதி; மற்றவர் பத்தினித் தெய்வத்தின் பிரதிநிதி. இவர்களோடு வர்ணம் பூசிய தடியைத் தாங்கும் குருவானவரையும் சேர்த்தால் மொத்தமுள்ள கடவுளர்கள் மூவர். இந்த மூன்று கடவுளர்களும் முக்கியமானவர்கள் என்றும் பிரசித்தமானவர்கள் என்றும் ஒவ்வொருவரும் வாழ்வது பல கேடயங்களில் என்றும் நொக்ஸ் கூறுகிறார்.

(11-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதானய்யா மட்டுநகர்!

நாரதர்

(2)

"நாழைவாம் பூ முடிச்சு, தடம் பார்த்து நவட நடந்து-நடை நடந்து-வாழைமயிலேபோல வந்த..." என்ற சினிமாப் பாட்டு எதிரே ஒரு ஹோட்டலில் முழங்கிக்கொண்டிருந்தது. இலங்கையில் எந்தப் பக்கத்துக்குப் போனாலும் நமது வர்த்தக ஒலிபரப்பு துரத்தி வரும் போலிருக்கிறது.

மட்டக்களப்பு நகரத்தில் இறங்கினோம். பிரயாணப் பை எனது தோளின் தலையாகத் தொங்க, தலையணை நவத்தின் கைகளில் பரிதாபமாக நசுங்க, நவம் நடக்க, நான் நடக்க, காலமும் நடந்தது.

நான் மட்டக்களப்புக்கு வருகிறேன் மட்டக்களப்பு எப்படிப்பட்ட இடம்? இங்கு போல் பஸ் வண்டிகளில் ஏறினால் ஏறாவூர் 'பயின்ட்' செங்கலடி 'பயின்ட்' என்பார்களா அல்லது சுத்த தமிழில் பேசுவார்களா என்று நவத்தைக் கேட்டெழுதியிருந்தேன். அதற்கு நவம் இது தமிழகமய்யா தமிழகம் என்று அடித்து எழுதினார்.

ஆனால் எல்லா நகரங்களிலும் வழக்கமாக உள்ள மெயின் வீதி, ஆஸ்பத்திரி போன்றவை தவிர, சில தெருக்களின் பெயர்கள் வாயில் நுழையச் சிரமப்படுகின்றன. உதாரணத்துக்கு ஸ்டீபன்ஸ் றோட்டு, வண்டிங் லேன், சவிங்ரன் ஒழுங்கை ஆகியவற்றைச் சொல்லலாம். இது நமக்குள்ளே பேசுகிற பேச்சு. மேற்கொண்டு—

புளியந்தீவு என்று ஒருவர் சொல்லுகிறார். சிங்களவாடி என்று இன்னொருவர் சொல்லுகிறார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால் நவத்தின் 'புக்கைத்தீ'ற்கு வந்து விட்டோம் என்று மட்டும் புரிந்தது.

அங்கு எட்டுத் திசைகளிலும் பதினெட்டு கோணங்களிலும் இருந்து வந்த கேள்விக் கணைகளுக்கு எதிர் அஸ்திரம் விட்டு அத்தனையையும் தடுத்து என் கோஷ்டியை ஒரு தூக்கிய பொழுது நவம் ஒரு பெரிய வெடியைத் தூக்கிப் போட்டார்.

"பெரிய மனிதர்கள் பிரயாணம் செய்தால் அந்தக் களைப்புத் தீர சிரமபரிகாரம் செய்துகொள்வார்கள். நீங்களும் ஏன் ஒரு பெரிய மனிதனாகக்கூடாது?" என்று கேட்டார் நவம்.

நான் எதிர்பாராமலே ஒரு பெரிய மனிதனாகி விட்ட செய்தி அவருக்குத் தெரியாததுபோல் இருக்கிறது. மட்டுநகரில் எனக்குத் தெரிந்த வேறு எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இருந்தும் அவர்கள் யாருக்கும் தெரியாமல்—அதாவது வருகிறேன் என்று சொல்லாமல் வந்து குதித்திருக்கிறேன். இதைவிட எனக்குச் சாதகமாக முடியக்கூடிய எத்தனையோ காரியங்களை பிறருக்குச் சொல்லாமல் செய்து முடித்திருக்கிறேன். இவற்றிலிருந்து சொல்லாமலே செய்வர் பெரியோர் என்ற மூதாதையர் வாக்குப்படி நான் என்றைக்கோ பெரிய மனிதனாகிவிட்டேன். இருப்பினும் இந்தப் பொடி விஷயமும் ஏன் எனது பெரிய மனிதத்தனத்துக்குக் குறுக்கே நிற்க வேண்டும் என்ற பேராசையில் சிரம பரிகாரம் செய்துகொள்ள இணங்கினேன். நான் பெயருக்கு ஓய்வு எடுத்துக்கொள்ளச் சம்மதித்தபோதிலும் எனது சிந்தனை ஓய்வு பெற மறுத்துவிட்டது. நாங்கள் மட்டக்களப்புக்கு வரும் வழியில் பார்வையிட்ட வந்தாறுமூலை, சித்தாண்டி, சந்திவெளிபோன்ற கிராமங்கள் என் நினைவைத் தொட்டிழுத்தன.

இந்தக் கிராமங்களில் ஒரு சில பகுதிகளைத் தவிர, ஏனைய இடங்களில் நெருக்கமான குடிசனத்தைக் காண முடியாது. பெரும் பகுதி வெட்டையாய் வெளியாய், தென்னந் தோட்டங்களாய் மரக்காடுகளாய் காட்சி தருகிறது.

சித்தாண்டிக் கந்தசுவாமி கோவிலுக்குப் போயிருந்தோம். இந்தச் சூழலில் வாழும் மக்களுக்கு இந்தக் கோவில் ஒரு விசேட தலமாக விளங்குகிறது. கோவில் வாசலில் நின்ற ஒரு பெரிய ஆலமரத்தை வெட்டிவிட்டு, சித்திர வேலைப்பாடமைந்த ஒரு சிறந்த கோபுரத்தைக் கோவில் முகப்பில் அமைத்திருக்கிறார்கள்.

கடந்த யுத்த காலத்தில் இந்தப் பகுதியில் ஓர் இரவு ஒரு யுத்த விமானம் பொழிந்த சில குண்டுகளில் ஒன்று இந்தக் கோவிலுக்கு அருகாமையில் விழுந்தும் யாருக்கும் ஒரு சேதமும் ஏற்படவில்லையாம். இந்தக் குண்டை சித்தாண்டிக் கந்தசுவாமியாரே ஒரு கையை நீட்டித் தாங்கியதாக இங்குள்ள மக்கள் நம்புகிறார்கள் என்று நவம் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார்.

"பூ! அப்படியென்றால் இந்தக் கந்தசுவாமியார் இருக்கும் வரை நம்மை ருஷ்யாக்காரன் என்றால் என்ன அமெரிக்காக்காரன் என்றால் என்ன ஒன்றுமே செய்ய விட முடியாது" என்ற ஒரு பொன்மொழியை உதிர்த்து விட்டேன். நானும் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு பொன்மொழியைச் சொல்லிவிட்டு அக்கம் பக்கம் பார்க்கிறேன், யாராவது குறித்து வைத்து தொகுப்பு வெளியிடுவார்களா என்று. யாருக்கும் புத்தி வந்ததாகத் தெரியவில்லை. நிற்க,

> **நாரதர் 'பெரிய மனிதர்'**
>
> மட்டக்களப்பைப் பற்றிச் சொல்வதோடு நிற்கவில்லை இந்த நாரதர். இன்னொருபோடும் போட்டிருக்கிறார் இந்தக் கட்டுரையில்! தாம் எப்பொழுதோ பெரிய மனிதராகி விட்டாராம்!
>
> எப்படி, எந்த விதத்தில் என்பன போன்ற கேள்விகளுக்கு எல்லாம் தமது பாணியில் பதிலும் இறுத்திருக்கிறார்.

அதோ, நவம் கோவிலுக்குள் போகிறார். அவர் வருவதற்கு முன்னதாக அவரைப் பற்றியும் நாலு வார்த்தை ரகசியமாகச் சொல்லிவிடுகிறேன். யாவரும் அறிந்தபடி இவர் ஒரு ஆசிரியர். நீல வேணியை எழுதி முடித்த கையோடு இன்னொரு நெடுங்கதையை எழுதி விட்டதை தொட்ட குறையாகக் கட்டி வைத்து விட்டு பகல் வேளைகளிலும் மூன்று நான்கு மணித்தியாலங்களுக்குக் குறையாமல் தூங்கி எழுகிறார் என்று கேள்வி.

இவர் பிரமச்சாரியாக இருந்த காலத்தில் நாலுபத்து தடவை காத்தான்குடி மத்திய கல்லூரிக்குச் சென்று வந்ததன் பயனாக இன்றைக்கு ஒரு கையில் இந்துமதியையும் மறு கையில் முகுந்தனையும் வைத்திருக்கிறார். எனது இந்தப் பிரயாணத்துக்கு ஒரு வாரம் முன்னதாக நவம் எழுதிய கடிதம் ஒன்றில், "......என் இந்த ஒரு சாதா சாப்பாடு என்ற பெயரில் 'தண்டித்து' வந்த எனது மனைவி சமீபத்தில் முகுந்தனுக்குத் தாயாகியிருப்பதால் இந்தத் தண்டனையில் இருந்து நீங்கள் தப்பினீர்கள். என்ன இருந்தாலும் நீங்கள் ஒரு அதிர்ஷ்டசாலிதான்" என்று கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இது நமக்குள்ளே பேசுகிற பேச்சு; மேற்கொண்டு—

நேரம் மாலையாகிவிட்டதால், எங்கள் திட்டப்படி இப்பொழுது புறப்பட்டு நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஆரையம்பதிக்குச் சென்று அங்கு இரவு முகாமிடுவது என்று எண்ணியிருந்தோம். அதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருக்கையில் அந்த வீட்டில் ஒரு சிறுவன் விளக்குச் சிம்னியைத் துடைத்துக்கொண்டிருந்தான். சிறுபிள்ளையின் கையில் சிம்னியைக் கொடுத்தால், அது அதைத் தரையில் போட்டுத்தான் செய்யும். தரையில் விழுந்த சிம்னி [illegible] உடைந்துவிட்டது.

இதற்கிடையில் நாங்கள் கொஞ்சத்தூரம் சென்று விட்டோம், அதே சிறுவன் இளைக்கக் களைக்க ஓடி வந்து எங்களைத் திருப்பி அழைத்துச் சென்றான். அங்கு, கண்ணாடிப் பொருள் உடைந்த நேரத்தில் வீட்டை விட்டுப் புறப்படுவது கூடாது என்று பெண்கள் கட்சி காரசாரமாக வாதாடியது. பெண்களின் வாதம் சரியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களுடைய கொள்கைகளுக்கு ஆண்கள் கட்சி கட்டுப்பட்டு தலைவணங்கிப் போக வேண்டியது உலகப் பிரசித்தமானதால் பிரயாணம் தடைப்பட்டது. சகுனங்கள் முகூர்த்தங்கள் பார்த்து பழைய பழக்க வழக்கங்களுக்கு மதிப்புத் தரும் கலையில் திறமைசாலிகள் என்று இதுவரை யாழ்ப்பாணத்துப் பெண்களுக்கு ஒரு 'கௌரவ'ப் பரிசைக் கொடுத்திருந்தேன். அதில் பாதியை மட்டுநகர்ப் பெண்கள் தட்டிக்கொண்டுபோகிறார்கள்.

வரும் வழியில் "இந்தப் பழைய கொள்கைகளில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?" என்று நவம் கேட்டார். நான் பதில் சொல்லவில்லை. என்ன பதிலைச் சொன்னாலும் அதற்கு எதிர்க் கேள்வி போட்டு மடக்கக்கூடிய அளவு இன்று உலகம் முன்னேறிவிட்டது. ஒரு நாள், பாருங்கள், அடுத்த வீட்டு ஐயாத்துரையிடம் "மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என்று சொல்லுகிறார்கள்" என்று சொன்னேன். அந்த மனுஷன், "இந்தக் காலத்திலும் குரங்குகள் வாழத்தானே செய்கின்றன. இந்தக் குரங்குகளில் இருந்து நாம் அறியும்படியாக ஏன் ஒரு மனிதன்கூட பிறக்கிறதில்லை?" என்று ஒரே அடியாய்க் கேட்டுவிட்டார்.

நகரத்தில் ஒரு தெரு ஓரத்தில் ஏதோ ஒரு கூட்டம் நடந்தது. சனத்திரளில் புகுந்து நெளிந்து மறுகரையை அடைந்தால் அங்கு புன்னகையுடன் நின்றவர் கதாசிரியர் பொன்னு. அவரை அங்கேயே விட்டு விட்டு நகர்ந்தால் எதிரே ஒருவர் வந்தார். அவரை நவம் அருகில் அழைத்து வந்து "உங்களுக்கு ஒருவரை அறிமுகம் செய்து வைக்கப் போகிறேன்" என்றார்.

"யாரை? நாரதரைத் தானே!" என்று சிரித்தபடி கேட்டார் அவர். 'நீங்கள் வருவது தெரிந்த விஷயம். ஆனால் இப்படிப் பிரத்தியட்சமாகக் காட்சி தருவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை. காவி கமண்டலங்களோடு ஒரு தில்லானாப் பாடி ஆகாய மார்க்கமாக வருவீர்கள் என்று எண்ணினேன்" என்றார் அவர்—சுதந்திரன் சென்னை நிருபர் சமுத்தரசன் (பத்மநாதன்)

"நான் ஆகாய மார்க்கமாக நீங்கள் சொன்ன கோலத்தில் வர முயற்சித்தாலும் முயலலாம். ஆனால் பாட்டுப்பாடி வரச் சொல்லுகிறீர்களே. எனக்குக் குரல் இரவல் தர யார் இருக்கிறார்கள்" என்று மிக விசனத்துடன் கூறினேன்.

தெருவில் ஒரு உயரமான 'மேக் கப்' கலையாத ஒரு மனிதர் சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு இருக்கிறார். அவர் ஒரு பித்தனய்யா—பித்தன். அடுத்து வருகிறவர் மட்டுநகர் மக்களின் மனதில் ஒரு தனியிடம் பெற்று வாழும் மக்கள் பிரதிநிதி திரு செ. இராசதுரை. அவர் அருகில் நிற்பவர் மாஸ்டர் சிவலிங்கம். தொடர்ந்து வருபவர் அறப்போர் வீரர் திரு அரியநாயகம்.

யாழ்ப்பாண மக்களும் தமிழ்தான் பேசுகிறார்கள். அவர்கள் ஒரு மெட்டில் பேசுகிறார்கள். இவர்கள் இன்னொரு மெட்டில் பேசுகிறார்கள். வடக்கில் வழக்கில் உள்ள சில சொற்கள் புதியவர்களுக்கு விளங்காதது போல இங்கும் சில சொற்கள் வழக்கில் உண்டு.

ஒரு சமயம் நண்பர் நவம் என்னைப் பார்த்து, "தம்பிறுகினால் ஒள்ளம் கெளியுங்கள்" என்றார். இதைக் கேட்டதும் எனக்குத் தலை சுழலத் தொடங்கியது. எனது தர்ம சங்கடமான நிலையை உணர்ந்து மனமிரங்கி அவரே அந்த வாக்கியத்தை மொழி பெயர்த்தார். "தலை சுற்றினால் கொஞ்சம் சரியுங்கள்—படுங்கள்" என்று இந்த வாக்கியத்துக்குப் பொருளாம்.

'என்ன பேச்சு டாப்பா அது!'

(தொடரும்)

## மோட்டார் கார் உற்பத்தி....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களை இணைத்துப் பொருத்தி இந்த நாடக மேடை கட்டப் பெற்றுள்ளது. 74 மீட்டர் அகலமுள்ள ஒளித்திரையின் விளிம்பு இடையே தூண்கள் எவையுமின்றி இருக்கிறது. அதன் உச்சப் பகுதி தரையிலிருந்து 35 மீட்டர் உயரத்தில் இருக்கிறது.

மேடைக்கு முன்னுள்ள மண்டபத்தில் 70,000 பேர் வசதியாக அமருவதற்காக இருக்கைகள் அமைக்கப் பெற்றுள்ளன. இந்த இருக்கைகளுக்கு அடியிலுள்ள இரண்டடுக்குக் கட்டடத்தில் இயற்கை ஒலியால் வெளிச்சமாக விளங்கும் ஒரு கண்காட்சியும், வாசனை, வாடுகை நிலையங்களும், ஒரு சிற்றுண்டிச்சாலையும் நிறுவப்பெற்றுள்ளன.

### அணுகுண்டு வெடிப்பின் விளைவு

அணுகுண்டு வெடிப்பின் விளைவில் 30 இலட்சம் குழந்தைகள் பிறவிக் கோளாறுகளுடன் பிறக்கும் என்று டாக்டர் லினஸ் ஆலிங் என்ற விஞ்ஞானி இங்கு கூறினார்.

#### அணுகுண்டு!

ஏற்கனவே வெடிக்கப்பட்டுள்ள அணுகுண்டுகளின் விளைவாக இந்தக் குழந்தைகள் பிறவிக் கோளாறுடன் பிறக்கும் என்றார் அவர்.

#### நஞ்சு!

தரைக்கு இரண்டு மைல் தூரத்தில் 20 மெகாடன் சக்தியுள்ள அணுகுண்டு ஒன்று வெடித்தால் சுற்றுப் புறத்தில் உள்ள 700 சதுர மைல் பரப்பை அது நச்சுமயமாக்கும் என்றார் அவர்.

#### உலகே அழியும்!

அமெரிக்காவிலோ ருஷ்யாவிலோ உள்ள எல்லாரையும் கொல்வதற்கு இந்தக் குண்டுகளில் 300 இருந்தால் போதும். 4,000 குண்டுகள் வெடித்தால் [illegible] மனிதப் பூண்டே [illegible] விடும் என்றார்.


கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன் பாவாடை கிமோனா முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலும் முள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன் மால்ஸ்,

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1960 ஆகஸ்ட் மாதம் 14-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.

# மலைநாட்டுத் தமிழர் பிரதிநிதித்துவம்

ஈழமணித் திருநாட்டின் வளத்துக்கும், நலத்துக்கும், பொருளாதார பலத்துக்குமாக சுமார் ஒன்றரை நூற்றாண்டுக்காலம் உதிரத்தை உப்பு நீராகச் சிந்தி, ஓடாக உழைத்து வந்த நமது மலைநாட்டுத் தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் 1952-ம் ஆண்டு அபகரிக்கப்பட்டது. ஆட்சியிலே அவர்கள் அனாதைகளாக்கப்பட்டார்கள். அரசியலில் ஊமைகளாக்கப்பட்டார்கள்!

அன்று முதல் இன்றுவரை மலைநாட்டுத் தமிழ் மக்கள் தங்கள் குரலை நாட்டின் ஆட்சி மன்றத்தில் எழுப்ப முடியவில்லை. எடுப்பார் கைப்பிள்ளைகளாக, ஏமாளிகளாக, ஒடுக்கப்பட்டவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக அவர்கள் ஆக்கப்பட்டார்கள்.

இந்த இழிநிலை ஒழிய வேண்டும் என்று திரிகரணசுத்தியுடன் நிலையாக நின்று போராடி வந்த ஒரே கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் என்பதை மறுக்க முடியாது.

தமிழரசுக் கட்சி தனது நான்கு அடிப்படைக் கோரிக்கைகளில் மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரஜாஉரிமை வாக்குரிமைப் பிரச்னையையும் ஆரம்பத்திலிருந்தே ஒன்றாகக் கொண்டது. கடந்த மார்ச் மாதத்தில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் தமிழரசுக் கட்சியின் ஆதரவை நாடி வந்தபோது, குறைந்தபட்சக் கோரிக்கைகளாகச் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளிலும் இப்பிரச்னை இடம் பெற்றது. அதாவது, மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு நியாயபூர்வமான உரிமைகள் எல்லாம் கிடைக்கும் வரை, அரசாங்கம் அவர்களுக்கு நான்கு நியமன அங்கத்தவர்கள் பதவிகளைக் கொடுக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சி கேட்டுக்கொண்டது.

மேற்படி கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியினர் முற்றாக நிராகரித்தனர். ஆனால், அதே வேளையில், சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்வார்கள்போல் தெரிந்தது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்தி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வரத் தமிழரசுக் கட்சி உதவினால் மலைநாட்டுத் தமிழர்களுக்கு தாம் இரண்டு நியமன அங்கத்தவர் பதவிகள் வழங்கலாம் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களில் முக்கியமானவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இந்த வாக்குறுதியின் பயனாகவே இப்போது பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா மலைநாட்டுத் தலைவர் திரு சௌமியமூர்த்தி தொண்டமானை ஒரு பிரதிநிதியாக நியமித்துள்ளார். சந்தர்ப்பம் ஏற்படும்போது கீழ் சபைக்கோ அல்லது மேல் சபைக்கோ இன்னொரு பிரதிநிதியையும் நியமிக்கலாம் என்று நம்பவும் இடமிருக்கிறது.

மலைநாட்டு மக்களின் பிரதிநிதி ஒருவர் ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு நியமிக்கப்பட்டது தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த ஒரு கணிசமான வெற்றியாகும். அதுவும் இம்புல்கொடை வீரர் திரு எஸ். டி. பண்டாரநாயகா, வெலிமடை வருப்பு வெற்றியர் திரு கே. எம். பி ராஜரத்ன போன்றவர்களின் பகிரங்க எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இந்த நியமனத்தைத் துணிந்து செய்தமைக்காக பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா பாராட்டுக்குரியவராகிறார்.

தமிழ் பேசும் மக்கள் ஒருமித்து, ஒன்றுபட்டு, ஒரே குரல் எழுப்பி நின்றமையினால்தான் இந்த வெற்றி கிடைத்தது என்பதை யாவரும் உணரவேண்டும். இதை நாம் சுட்டிக்காட்டுவதைவிடப் பிறர் சுட்டிக்காட்டுவதை இங்கு ஆதாரமாகக் குறிப்பிட விரும்புகிறோம்.

உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரும், பெயரளவில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தம் சொந்தச் செல்வாக்கினால் வெற்றியீட்டியவருமான திரு எம். சிவசிதம்பரம் என்ன கூறுகிறார் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

"'கடைசி இந்தியன் இந்த நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட பின்தான் நான் கண்மூடி நிம்மதியாக நித்திரை செய்வேன்' என்று கூறிய காலஞ்சென்ற பண்டாரநாயகாவின் மனைவி சிறிமாவோ பண்டாரநாயகா அதே இந்தியருள் ஒருவரான—அவர்களின் தலைவரான—திரு தொண்டமானைப் பாராளுமன்ற நியமன அங்கத்தவராகச் சேர்த்துக்கொண்டது எதனால்? தமிழ் மக்களின் ஒற்றுமைதான் காரணம். சிங்களம் மட்டும் சட்டத்தின்பின் தமிழ் பேசும் மக்களிடையே காணப்படும் உறுதிப்பாடான ஒற்றுமை நீடித்து வருமானால் தமிழினம் சிங்கள இனத்தைப்போன்று இந்நாட்டில் உரிமையுடன் வாழும் காலம் அதிக தூரத்திலில்லை"

தமக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பின்போது திரு சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் கூற்று நிரம்பிய உண்மையுடையதாகும்.

மலைநாட்டுத் தமிழர்களுடைய நியமனப் பிரதிநிதிப் பதவியை இலங்கை ஜனநாயகக் காங்கிரஸின் உயர்தரத் தலைவர் ஒருவர் ஏற்றுக்கொண்டது முறையல்ல என்று ஒருசிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஜனநாயகக் காங்கிரஸ் மலைநாட்டுத் தமிழ் மக்களின் இழந்த உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராட வேண்டிய ஒரு ஸ்தாபனம். அதன் தலைவர்களில் ஒருவர் அரசாங்கத்தின் நியமன அங்கத்தவர் பதவியை ஏற்றுக்கொண்டால் அவர் அரசாங்கக் கட்சிக் கொரடாவின்கீழ் கட்டுப்பாடாக இயங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாவார். இந்த நிலையில் மலைநாட்டுத் தமிழரின் விடுதலைக்காக அவர் எவ்வண்ணம் கிளர்ச்சி செய்ய முடியும் என்று அவர்கள் கேட்கிறார்கள்.

இந்த கேள்வியிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆயினும், இன்று திரு தொண்டமான் ஒரு நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்கும் செயலாகவே நியமன அங்கத்தவர் பதவியை ஏற்றுக்கொண்டார் என்று நாம கருதுகிறோம். தமிழ் பேசும் மக்களுடைய உரிமையைப் பாதுகாப்பதா அல்லது நியமன அங்கத்தவர் பதவியைப் பாதுகாப்பதா என்ற ஒரு பிரச்னை எழுமானால் திரு தொண்டமான் நிச்சயம் பத[illegible]யைக் காப்பாற்றத் தவறமாட்டார் என்று தமிழ் பேசும் மக்கள் நம்பியிருப்பதில் [illegible]?

# நஷ்டத்துக்கு மேல் நஷ்டம்!

## இ. போ. ச. வின் உயிர் ஊசலாட உண்மைக் காரணம் என்ன?

## தேசியமயக் கொள்கைக்கு மக்கள் இன்னும் தயாராய் இல்லை

## சிங்கள 'சிறீ'யும் சதி செய்தது

ஆறு அரசாங்க ஆலைகளுக்கு மூடுவிழா நடத்தப்பட்டுக் கணக்கு முடிக்கப்பட்ட செய்தி கடந்த வாரச் சுதந்திரனில் வெளியிடப்பட்டது.

இ. போ. ச.வின் உயிரும் ஊசலாடுகிறது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சுதந்திரன் செய்தி வெளியிட்டு நான்கு ஐந்து தினங்களிலேயே இ போ ச. கதியை தசையடைந்துவரும் பரிதாபம்பற்றித் தினப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் முதல் பக்கச் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

இ. போ. ச.வுக்கு கடந்த ஆண்டில் பாரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 13 லட்சம் ரூபா நஷ்டம். இ. போ. ச தொடங்கப்பட்ட 1958 ஆண்டில் ஏற்பட்ட நஷ்டத்தைக் காட்டிலும் இது 9 லட்சம் ரூபா அதிகப்படியானது.

அதாவது நஷ்டம் ஆண்டுக்கு ஆண்டு ஏறிக்கொண்டு போகிறது. தலைக்குமேல் ஏறும்போது கம்பனியைக் கலைக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

ஏன் இவ்வளவு பாரிய நஷ்டம்? இ போ. ச. தலைவர் அதற்கு ஒரு காரணம் கூறுகிறார். இ போ. ச. ஊழியர்களின் சம்பளமாகவும் அலவன்சுகளாகவும் அதிகம் பணம் போய்விடுகிறதாம். இதனால்தான் அதிகப்படியாக நஷ்டம் ஏற்படுகிறதாம்.

பத்திரிகைகளும் வேறுசிலரும் இன்னும் வெவ்வேறு காரணங்கள் தருகின்றனர். இ. போ. ச. ஊழியர்கள் சிரத்தையோடு வேலை செய்வதில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தவறானவை என்று சொல்வதற்கு இல்லை. ஆயினும் இவற்றால் மட்டுந்தான் பாரிய நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்வதற்கும் இல்லை.

இங்கிலாந்தில் சில காலத்துக்கு முன்னர் பஸ் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கிப் பார்த்தார்கள். பலன் இல்லை. பின்னர் மீண்டும் பழைய முறைக்குத் திரும்பினார்கள். 1958-ல் இலங்கையில் பஸ் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கிய பண்டாரநாயகா அரசாங்கம் இதை எண்ணிப் பார்க்கவில்லை. இங்கிலாந்திலேயே தோல்வி கண்ட தேசியமயக் கொள்கை இலங்கையில் சரிப்போகும் என்று நம்பலாமா?

தேசியமயமாக்கப்பட்ட ஒரு சேவை செம்மையாக நடந்து செழித்து ஓங்க வேண்டுமானால் அதன் ஊழியர்கள் அக்கறையோடு வேலை செய்தால் மட்டும் போதாது. ஊழியர்களின் சம்பளங்கள் அலவன்சுகளைக் குறைத்துச் சிக்கனத்தைக் கையாண்டால் மட்டும் நஷ்டம் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

தேசியமய சேவை ஆரம்பிப்பதானால் மக்கள் அதற்குத் தயாராக இருக்க வேண்டும். அரசாங்கத்தில் மக்களுக்கு நம்பிக்கையும் நல்லெண்ணமும் விசுவாசமும் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக மக்களுக்கு தேசிய உணர்ச்சியும் (National Feeling) சமுதாயக் கட்டுப்பாட்டு உணர்ச்சியும் (Civic Sense) வேண்டும். அப்போதுதான் அரசாங்கம் வேறு நாம் வேறு என்ற பேத உணர்ச்சி இல்லாமல் அரசாங்கத்தின் சொத்துக்களைத் தமது சொந்த உடைமைகளாக மதித்து வருவர்.

நாட்டில் இந்த நிலைமை இன்று இருக்கிறதா? இ. போ. ச. பஸ்களைப் பொறுத்தவரையில் பொதுமக்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள்?

வடக்குக் கிழக்கு மாகாணங்களை எடுத்துக் கொண்டால் அங்கு உடைந்து உருக்குலைந்த லொட லொட்டை பஸ்கள் கட புடா சத்தத்துடன் ஓடுவதும் கராச்சில் ஓய்ந்து படுப்பதுமாக இருக்கின்றன.

வேண்டாத சிங்கள சிறீயை வலுக்கட்டாயமாக எந்தவித ராஜதந்திரமும் இல்லாமல் பஸ்களில் புகுத்தியதால் அப்படியான இலக்கங்களோடு உள்ள நல்ல பஸ்களைத் தமிழ்மொழி வழங்கும் வடக்கிலும், கிழக்கிலும் நுழைக்க முடியாத நிலைமை. ஆகவே தான் ஆங்கில எழுத்துக்களை உடைய பழைய பாடாவதி பஸ்கள் இந்த இரண்டு மாகாணங்களிலும் பற்றாக் குறையாக இருந்து இளைப்பு இயங்குகின்றன. பொதுமக்களால் அவற்றில் நம்பி ஏறிப் பிரயாணஞ் செய்ய முடியாத நிலைமை. எந்த இடத்தில் எப்போது அந்த ஓட்டை உடைசல் பஸ்கள் ஸ்டிரைக் செய்யும் என்று தெரியாது. அதனால் இந்த இரண்டு மாகாணத்திலும் பொது மக்கள் இ. போ. ச. பஸ்களை ஆதரிப்பதில்லை.

தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் கார்களிலும் வான்களிலுமே பெரும்பாலானவர்கள் பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் கொடுக்கும் பணம் தனிப்பட்டவர்களுக்கும் போய்ச் சேருகிறது. இ. போ. ச. தூங்கி வழிகிறது. ஆயின் நஷ்டம் வராதா?

—கே. கே. ஆர்.

# மொழி இலாகாவில் விரைவில் மாற்றம்

## செனிவிரத்தினகூட பிரியாவிடை கூறலாம்

## சிறிமாவோவின் நடவடிக்கை

(சுதந்திரன் நிருபர்)

அரசாங்க உத்தியோக மொழி இலாகாவில் பல பெரிய பதவி மாற்றங்கள் உடனடியாக நடைபெறலாமென்று பலத்த வதந்திகள் அடிபடுகின்றன.


அரசகரும மொழி இலாகாவில் உள்ள ஒரு சில உயர்தர அதிகாரிகள் யு. என். பி. யின் கையாட்கள் என்பதும், தமிழ் மொழியின் பரம விரோதிகள் என்பதும் தமிழ்பேசும் மக்கள் அறிந்த விஷயமாகும்.

இவர்களை வைத்துக் கொண்டு நாட்டில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே ஒரு சமரஸமான சூழ்நிலையை ஏற்படுத்த முடியாதென்று சிறிமாவோ அரசாங்கம் கருதுவதாகத் தெரிகிறது.

அரசகரும மொழி இலாகா தமிழ் மொழிக்கும் உரிய இடம் அளிக்கவேண்டுமானால் அந்த இலாகாவில் உள்ள பெரிய தலைகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்றும், தமிழ் மொழி சம்பந்தப்பட்ட கருமங்களைக் கவனிக்க ஒரு உதவிக் கமிஷனர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் தமிழரசுக் கட்சி நீண்ட நாட்களாக வற்புறுத்தி வருகிறதல்லவா?

தமிழரசுக் கட்சியின் கோரிக்கை விரைவில் நிறைவேறும் என்றும் திரு செனிவிரத்தின போன்றவர்களே பதவியிலிருந்து மாற்றப்படக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலஞ்சென்ற கோப்பாய்க் கோமான் திரு கு. வன்னியசிங்கத்தின் நினைவாக உபகரிக்கப்பட்ட "வன்னியசிங்கம் ஞாபகார்த்த வெள்ளிக் கிண்ணம்" உரும்பிராய் இந்துக் கல்லூரி "சீனியர் சாம்பியன்"னுக்கு அடிஷனல் டிஸ்திரிக் நீதிபதி திரு டி. தனபாலசிங்கத்தின் பாரியாரால் வழங்கப்படுகிறது.

இந்த வெள்ளிக் கிண்ணம் அச்சுவேலி திரு. ந. சிவபாதத்தினால் உபகரிக்கப்பட்டது. கோப்பாய்த் தொகுதி ஆசிரியர் சங்கம் நடத்திவரும் போட்டிகளில் ஒவ்வொரு வருடமும் திரு வன்னியசிங்கத்தின் பெயரால் இப்படியான வெள்ளிக் கிண்ணங்களை வெற்றி பெறுபவர்களுக்கு வழங்குவதற்காக உபகரிக்கத் திரு சிவபாதம் முடிவு செய்திருக்கிறார்.

# கத்தி முனையில் குழந்தையைக்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய அந்த உருவத்தின் முரட்டுக் கரத்தைத் தடுத்து விரி அடித்தேன்......

"ஆனாலும் குத்து விழுந்து விட்டது......

"குத்து கழுத்தில் விழவில்லை. புயத்தில் விழுந்தது......

"புயம் பிளந்துவிட்டது என்பதை உணர்ந்தேன். ஆனால் நோவோ, வலியோ அப்போது எனக்குத் தோன்றவில்லை.

## தலையில் குத்து

"இரண்டாவது தடவையாக அந்த முரடன் கையை ஓங்கி என் தலையை நோக்கிக் குத்தினான்......

"தடுத்தேன்......

"என்றாலும் கத்தி தலையில் பாய்ந்து குத்திக் கிழித்து விட்டது! இரத்தம் பீறிட்டு நெற்றியால் வழிவதை உணர்ந்தேன். ஆனால் நோவோ, வலியோ எனக்குத் தெரியவில்லை.

'மூன்றாவதாக, எனது நெஞ்சை நோக்கி.........

## கையில் காயம்

"ஆம், என் நெஞ்சை நோக்கிக் குத்த வந்தான். ஒரு கணம் 'தொலைந்தேன்' என்ற பயங்கரமான உணர்ச்சி என் உடலெல்லாம் மின் அலைபோல் பாய்ந்தது. ஆனால் மறுகணம் என் பலத்தை எல்லாம் சேர்த்து கத்தியுடன் வந்த கையைப் பிடித்து வளைத்து ரயில் வண்டியின் கதவுடன் மோதி அடித்தேன். என் முன் கையில் மற்றொரு கத்திக் காயம் ஏற்பட்டது.

"என் அதிர்ஷ்டம். கத்தி பிடியைவிட்டு முறிந்தது. அவனது கையும் பலமாக அடிபட்டுவிட்டது. அவன் சற்று அயர்ந்து போனதுபோல் தோன்றினான். அவனை முன் நோக்கி இழுத்து பிடரிபடக்கூடியதாய் ரயில் பெட்டியுடன் பலமுறை மோதி அடித்தேன்.

"அவன் அப்போது என்னோடு எதிர்த்துப் போராடுவதை விடுத்து என் பிடியிலிருந்து விடுபட்டுத் தப்ப முயன்றான். நான் அவன் போட்டிருந்த சட்டையின் முன்புறத்தில் கெட்டியாகப் பற்றிப் பிடித்திருந்தேன்.

## வெளியில் குதித்தான்

"என்னையும் சேர்த்து விசி இழுத்துக் கொண்டு அவன் கீழே குதிக்க எத்தனிக்கிறான் என்பதை நான் எப்படியோ ஒரு நொடிப் பொழுதில் உணர்ந்து கொண்டு, என் வலது காலை, வாயிலின் ஓரத்தில் பலமாகக் குத்திக் கொண்டேன்.

"அவன் என்னையும் சேர்த்து இழுத்தான். நான் அசையவில்லை. தன் சட்டையைக் கிழித்துக் கொண்டு வேகமாக ஓடிக் கொண்டிருந்த ரயிலிலிருந்து குதித்தான். அவன் சட்டையின் முன் பகுதி என் கையோடு இருந்தது; பின் பகுதி அவன் முதுகோடு போய்விட்டது. ஆனால் பாவம், பாய்ந்தவன் தலை குப்புறத்தான் பாய முடிந்தது!

## ரயில் நின்றது

"இவ்வளவு நிகழ்ச்சிகளும் இவ்வளவு சம்பவங்களும் சில விநாடிகளில் நடந்தேறின!

'உடனே நான் அபாயச் சங்கிலியை இழுத்தேன்......

"இதற்கிடையில் குழந்தையின் தகப்பனும் மற்றவர்களும் விழித்துக் கொண்டு, விவரம் அறிந்தார்கள், குழந்தை வீசியெறியப்பட்டுவிட்டது என்றதும் திருமதி வேங்கடராமன் பதைத்தார். குழந்தை கிருஷ்ணகாந்தியை இழந்து விட்டோம் என்றே எல்லோரும் எண்ணினோம்.

"ரயில் கார்ட் முதலானவர்கள் விரைந்துவந்து விவரம் அறிந்து ரயில் வண்டியைச் சிறிது தூரம் பின்னுக்குச் செலுத்தினார்கள். எல்லோரும் குழந்தையைத் தேடிக் கொண்டு சென்றோம்.

## முரடன் ஒழிந்தான் குழந்தை பிழைத்தது

"ஒரு கள்ளிப்புதர் அருகே அந்த முரடனைத்தான் முதலில் கண்டோம். மூர்ச்சித்த நிலையில் கிடந்தான் அவன்.

"மேலும் சிறிது பின்னுக்குச் சென்றபோது குழந்தையும் கீழே கிடக்கக்காணப்பட்டது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், அந்தக் கட்டாந்தரையில் குழந்தை விழுந்த இடத்தில் மட்டும் சிறிது பச்சைப் புல் காணப்பட்டது. அந்த இடம் மெத்தென்றிருந்தது!

"பின்னர் குழந்தையையும், அந்த முரடனையும் ரயிலில் தூக்கிப் போட்டுக் கொண்டு திருச்சிக்கு வந்தோம். குழந்தைக்கும் எனக்கும், அந்தத் திருடனுக்கும் சேர்த்து வைத்திய சிகிச்சையளிக்கப்பட்டது. குழந்தை பிழைத்துக் கொண்டது. முரடன் மூர்ச்சை தெளியாமலே இறந்தொழிந்தான்.

## ராஜாஜி ஆசி

"பின்னர் சென்னை சேர்ந்ததும் திரு. வேங்கடராமன் தம்பதிகள் குழந்தை கிருஷ்ணகாந்தியையும் என்னையும் தலைவர் ராஜாஜியிடம் அழைத்துச் சென்று அவரிடமிருந்து ஆசி பெற ஏற்பாடு செய்தார்கள்."

## மூன்று தழும்புகள்

(12-ம் பக்கம் பார்க்க)

# விரும்பிய ஆட்களுக்கு பொருந்தக்கூடியதாக விளம்பரம்

## அரசாங்க இலாகாகளில் உள்ள சில மேலதிகாரிகளின் விஷமத்தனம்

## படகு உத்தியோகத்துக்கு விண்ணப்பம் கோரியதிலும் தெரிவிலும் ஊழல்!

(சுதந்திரன் நிருபர்)

தங்களுக்கு வேண்டியவர்கள் சிலருக்கு உத்தியோகமும், பதவியும் தேடிக் கொடுப்பதற்காக சில அரசாங்க இலாகாகளில் உள்ள உயர்தர அதிகாரிகள், விண்ணப்பதாரர்களின் யோக்கியதாம்சங்களை, தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு அடிக்கடி மாற்றியமைப்பதாகவும், குறிப்பிட்ட ஒருசிலருக்கு பொருந்த வேண்டும் என்பதற்காக நிபந்தனைகளையும், தகுதிகளையும் தளர்த்திவிடுவதாகவும் ஒரு பலத்த புகார் கிளப்பப்படுகிறது.

உதாரணமாக சௌக்கிய சேவைப் பகுதியினர் படகு வள்ளங்கள் செலுத்தும் சுக்கான் மாலுமிகள் பதவிக்கு விண்ணப்பம் கோரிக் கடந்த பெப்ரவரி மாதம் ஒரு கஸட் விளம்பரத்தை வெளியிட்டனர். அதில் விண்ணப்பதாரர்கள் 21 வயதுக்கு மேலும் 35 வயதுக்கு உட்பட்டவருமாக இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

தகுதியான பலர் விண்ணப்பித்தார்கள். ஏப்ரல் மாதத்தில் நேர்முகப் பரீட்சையும் நடைபெற்றது. ஆனால் எவரும் தெரிவு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

### நிபந்தனையில் மாற்றம்

இப்போது திரும்பவும் அதே பதவிகளுக்கு அதே விளம்பரம் கஸட் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் வயது எல்லை மட்டும் 21 வயதுக்குக் கீழ்ப்படாமலும் 50 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதன் மர்மம் என்ன?

சென்ற முறை விண்ணப்பித்தவர்களுள் தகுதியானவர்கள் கிடைக்கவில்லையென்றால் இம்முறை வயதை 35க்குமேல் 50க்கு உட்படக் குறிப்பிட்டிருக்கலாம் அல்லவா?

### காரணம் என்ன?

மேலும் படகு வள்ளச் சுக்கானிகள் பதவி மிகவும் பொறுப்புவாய்ந்தது. சரியான கண் பார்வையும், தேக பலமும் உள்ளவர்கள் தாம் இப்பதவிக்கு எடுக்கப்பட வேண்டும். 50 வயதடைந்த தள்ளாத கிழவர்களை எடுத்தால் 5 வருடங்களால் அவர்கள் பென்ஷனுக்குப் போய்விடுவார்கள் அல்லவா? இப்படியான வயோதிபர்களை வேண்டும் என்று கோருவதன் உள்ளர்த்தம் என்ன?

### ஊழல்

தமக்கு வேண்டிய இருவரைத் தெரிவு செய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்கனவே முடிவு செய்துவிட்டார்கள் என்றும் அவர்களில் ஒருவர் 41 வயதையுடையவர் என்றும் மற்றவர் 49 வயதையுடையவர் என்றும் தெரியவருகிறது. வயது எல்லை 50க்கு உயர்த்தப்பட்டதன் இரகசியம் இப்படி இருவருக்கும் இடமளிப்பதற்காகவே என்று பேசிக்கொள்ளப்படுகிறது. இந்த ஊழல் அரசாங்கத்தின் கவனத்துக்கு வரவேண்டும் என்று இதர விண்ணப்பதாரர்கள் துடிக்கிறார்கள்.

# தேவை

பழம் பெரும் எழுத்தாளர்கள் மட்டுமல்ல, இளம் எழுத்தாளர்களும், ஆரம்ப எழுத்தாளர்களுங்கூடச் சுதந்திரனில் எழுதலாம்.

வழமைப் பிரகாரம் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கும், புதுப் புது எழுத்தாளர்களைத் தோற்றுவிப்பதற்கும் சுதந்திரன் விழைகிறது.

எழுதும் பழக்கத்தை எவரும் கைவிட வேண்டியதில்லை. சுதந்திரனுக்குத் தாராளமாக எழுதி அனுப்பலாம். தரமான படைப்புக்களும், சிறு சிறு திருத்தங்களோடு உபயோகப் படுத்தக் கூடியவையும் சுதந்திரனில் பிரசுரிக்கப்படும்.

பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா. இதைக் கவனிக்க வேண்டும். எழுதி அனுப்புகிற விஷயங்களுக்கு பிரதி வைத்துக் கொண்டால் சுதந்திரனுக்கு அனுப்புவதைத் திருப்பிப் பெற வேண்டிய அவசியம் ஏற்படாது அல்லவா?

இப்போது சுதந்திரனுக்குப் பின் வருவனவற்றை எழுதி அனுப்பலாம்:—

1. சிறு கதைகள்.
2. நெடுங்கதைகள்.
3. நாடகங்கள்.
4. நகைச்சுவைக் கட்டுரைகள்.
5. இலக்கியக் கட்டுரைகள்.
6. விஞ்ஞானக் கட்டுரைகள்.
7. மருத்துவக் கட்டுரைகள்.
8. தொழில் கட்டுரைகள்.
9. பொருளாதாரக் கட்டுரைகள்.
10. கவிதைகள்.


சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச் சிறந்தவை



கொழும்பு கொமேர்ஷல் கொம்பனி லிமிட்டெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

CCC 980


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்த பானை!

சிறுகதை எழுதியவர்: — “திவான்”

அதிகாலை ஐந்து மணிக்கு இன்னும் ஐந்து நிமிடம் பாக்கியிருந்தது அந்த நகரின் சேரிப் பகுதியைச் சேர்ந்த ஒரு மூலையில்—கண்ணைக் கசக்கிய வண்ணம் நிற்கும் ஒரு வாண்டுப் பயலைப் போல்—நின்றிருந்த அந்தக் குழாயடி அருகே ஒரே பரபரப்பு ஏறிக்கொண்டிருந்தது. குடங்களின் மோதல், பானைகளின் உரைசல், எல்லாமாகச் சேர்ந்து தூங்கிப் போய்க் கிடந்த அந்த இடத்தைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தன. இன்னும் தண்ணீரைக் கொட்டத் தொடங்கவில்லை குழாய். கொட்டப் போவதன் முன்னறிவிப்பாக 'ஹொர்' என்ற இரைச்சல் எழுந்து கொண்டிருந்தது. அதற்குள் அத்தனை கூட்டம்!

என்ன செய்வது! ஒரு மணித்தியாலத்திற்குள்—ஐந்து மணிக்கும் ஆறு மணிக்கும் இடையிலுள்ள அந்த அற்ப நேரத்திற்குள்—அந்தப் பகுதிவாழ் அத்தனை குடிகளும் தண்ணீர் எடுத்தாக வேண்டுமே! கொஞ்சம் தூங்கி விட்டால் சிறிது கண்ணயர்ந்து விட்டால் வெறுங் குடத்தைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு போகவேண்டியது தான்! அது மட்டுமா? அந்த அரக்கி முத்தம்மாவோடு யாரால் மல்லுக்கு நிற்க முடியும்? அந்தச் சண்டைப் பிசாசு தன் குண்டான் பானையோடு வர முன்பே பாத்திரத்தை நிறைத்துக் கொண்டு போய் விட்டால் தான் உண்டு! அல்லாவிட்டால் பானை உடையும் குடம் சிதறும்... அப்பப்பா! அதனுற்றான் அத்தனை பரபரப்பு! அத்தனை கூட்டம்!

நிறைய உண்ட சாரைப் பாம்பின் வயிற்றைப் போல் முடிச்சு விட்டுக் கிடந்த அந்தப் பாத்திரம் தாங்கிய பெண்களின் வரிசை, திடீர் என்று கறுகறுப்பாயிற்று. ஆம், குழாய் தன் 'ஹொர்' என்ற வரட்டுப்பாட்டை விட்டுவிட்டு குளிர்ச்சிநீரைச் சிந்தத் தொடங்கிற்று. பாத்திரங்கள் ஒன்றோடொன்று கொஞ்சுகண்டு அதற்கு வாழ்த்து இயம்பின.

“என்னடியம்மா செங்கமலம் அசைகிற, கெதியாய் எடுத்துக்கொண்டு விடன். அந்த அரக்கி முத்தம்மாள் வந்திரப்போருள்”— வரிசைக்குத் தலைமை தாங்கி நின்ற செங்கமலத்தை நோக்கி பின்னால் நின்ற யாரோ ஒருத்தி குரல் கொடுத்தாள்.

செங்கமலம் தன் பானையை நேராக வைத்து குழாயின் திருகணியை நன்றாகத் தளர்த்தினாள். வேறு நேரங்களைப் போல் குழாய் கண்ணைக் கசக்காமல் 'ஜில்' என்று தண்ணீரைச் சீறியடித்தது. காலை நேரம் பார்!

இருந்தும் என்ன பயன்? செங்கமலம் அரைப்பானையைக் கூட நிறப்பியிருக்க மாட்டாள் அதற்குள் அந்த முத்தம்மா வந்து தொலைத்துவிட்டாளே, தாடகை போல! வந்தவள் இடையிலிருந்த தன் பானையை கைக்கு மாற்றியபடி செங்கமலத்தை அணுகினுள். செங்கமலம் கவலைப்படவில்லை. கருமமே கண்ணுயிருந்தாள்.

“ஏய் செங்கமலம், கொஞ்சம் உன்ர பானையை எடு, நான் கெதியா பிடிச்சிற்று விடுறன். குழந்தை தொட்டிலில் கிடக்குது” என்ருள் முத்தம்மா, எவருக்கு மில்லாத உரிமையோடு.

செங்கமலம் எப்போதுமே சாதுதான், எவர் தன்னை எப்படித் திட்டினுலும் உதைத்தாலும் பொருட்படுத்தாது அவருக்கே நன்மை செய்யப் பார்க்கும் உத்தமி இல்லை, அப்பாவி. இருந்தாலும் இன்றைக்கு இந்தக் குழாயடி விஷயத்தில் மட்டும் விட்டுக் கொடுக்க அவளுக்கு மனம் வரவில்லை. இந்த ஒரு பானை தண்ணீருக்காக அவள் காலை நாலரை மணியிலிருந்தல்லவா காத்துக் கிடக்கிருள்! அப்படி மணிக்கணக்காக குழாயடியில் 'குடி' யிருந்தும் முதலில் தண்ணீர் எடுக்க முடியவில்லையென்ருல்...?

செங்கமலம் நிமிரவில்லை. தொடர்ந்து தன் வேலையில் ஈடுபட்டாள்.

“என்னடி நான் சொல்லுவது காதில் ஏறவில்லை?”—ஆத்திரத்தால் உந்தப்பெற்ற முத்தம்மா தனக்கே உரித்தான அதிகாரத்தோடு கேட்டாள்.

“கொஞ்சம் பொறு, இந்தப் பானையை நிறப்பிக் கொண்டு விடுறன்” என்று எதிர்ப்புத் தெரிவித்தாள் செங்கமலம்.

அட, இந்தச் செத்தகோழி செங்கமலமா முத்தம்மாவை எதிர்த்துப் பேசுகிருள்? முத்தம்மாவை ஆத்திரம் கௌவிற்று. போதாதற்கு, அங்கு நின்ற [illegible] பெண்கள் முத்தம்மாவைப்பார்த்து நமுட்டுச்சிரிப்புச்சிரித்தார்கள், அவள் ஆத்திரத்தைக் கிளறிக் கூத்துப் பார்க்க விரும்புவது போல்.

முத்தம்மா மூர்க்கம்மாவானுள்!

“எடி! உன்ர பானையை எடுக்கிறியா இல்லையா?”—முத்தம்மா 'அல்ரிமேற்றம்' அதாவது இறுதி எச்சரிக்கை விடுத்தாள் ருஷ்யாவைப் போல்.

“முடியாது!” என்ருள் செங்கமலம் எதற்குமே மறுப்புத் தெரிவிக்கும் அமெரிக்காவின் பாணியில்!

“என்ன முடியாதா? இப்ப முடியவைக்கிறன் பார்!” என்றவளாய் பாய்ந்தாள் முத்தம்மா!

கூடிநின்ற 'நேசநாடுகளு'க்கு என்ன செய்வது என்று தெரியவில்லை, “சண்டை பிடிக்காதேங்க, சண்டை பிடிக்காதேங்க” என்ற 'பஞ்சசீலத்தை' ஓதுவதைத் தவிர!

பாய்ந்து போன முத்தம்மா தாமதிக்கவில்லை. ஒரே உதை! 'தமுக்' கென்ற ஓசை வெடிகுண்டு வெடித்தது! அதாவது செங்கமலத்தின் பானை இரண்டாகப் பிளந்து சிதறிற்று!

“ஐயோ இந்த அநியாயத்தை கேட்பாரில்லையா?” என்று செங்கமலம் அழு[illegible] தன் பானையை நிறைத்துக் கொண்டு விறுவிறுவென நடந்தாள் முத்தம்மா!

அடுத்த நாள் அதிகாலை ஐந்து மணி.

அதே இடம், அதே கூட்டம், அதே பாத்திரங்கள். ஆனால் இன்று ஒரு சிறு மாற்றம். ஒரு நாளுமில்லாத கோலமாக, தண்ணீர் எடுக்கும் வரிசைக்குத் தலைமை தாங்கி நின்ருள் முத்தம்மா!

“சள சள சள”

தண்ணீர் கொட்டத் தொடங்கிற்று.

முத்தம்மா பானையை எடுத்து நேராக வைத்தாள். நீர் சிறிது பானைக்குள் இறங்கிற்று. இருந்தாலும் அவள் பார்வை முழுவதும் பானையிலேயே பதிந்து விடவில்லை. அடிக்கடி சற்றுத் தள்ளியிருந்த தனது வீட்டைப் பார்ப்பதும் பானையைப் பார்ப்பதுமாக இருந்தாள். அவள் வழக்கமே அப்படித்தான், பால் சட்டியை அடுப்பில் வைத்து விட்டு வந்து நிற்பவளைப்போல!

முத்தம்மா பிடித்த தண்ணீர் அரைக் குடத்தைத் தாண்டும்போது தான், செல்வச்சிருன், “அம்மோய்”! என்று வீட்டு வாசலில் நின்று உயிர் போகும் கடுகதி அழைப்பு விடுத்தான்.

“இந்த மூதேவிக்கு என்ன வந்திற்று?” என்று தனக்குள்ளேயே திட்டிக் கொண்ட முத்தம்மா, “இந்தப் பானையை கொஞ்சம் பாத்துக்க” என்று அருகில் நின்ற சின்னமணிக்கு கட்டளை கொடுத்து விட்டு வீட்டுக்கு ஓடுவதற்கும், வேருெரு பானையோடு அப்போதுதான் செங்கமலம் அங்கு வருவதற்கும் சரியாக இருந்தது. செங்கமலத்தைக் கண்ட முத்தம்மா இடையில் நின்று ஒரு முறைப்பு முறைத்து விட்டுத்தான் போனுள்.

ஓடிப்போன முத்தம்மா அதே ஓட்டத்தோடேயே திரும்பி வந்து கொண்டிருந்தாள். தூரத்தில் வரும் போதே அவள் கண்கள் குழாயை நோக்கி குறிவைத்தன. கூர்ந்து பார்த்தாள் முத்தம்மா. அடுத்த கணம் மயிர்க்கால்கள் ஒவ்வொன்றும் குத்திட்டு எழுந்தன. சினம் அவள் உதடுகளை 'சிடுசிடு' வெனத் துடிக்க வைத்தது. காரணம்?

செங்கமலம் குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டு நின்ருள்!

இவளுக்கென்ன திமிர்? முத்தம்மாவின் பானையைத் தள்ளி வைத்து விட்டு இப்போ வந்த இவள் தண்ணீர் எடுப்பதா? நேற்றுக் கொடுத்த உதை போதாது. இன்றைக்கும் ஒரு உதை போட்டு பானை ஓட்டைக் கையில் எண்ணிக் கொடுத்தால்தான் அந்தச் செங்கமலம் சரிப்பட்டு வருவாள்.

முத்தம்மாவின் சினம் ஏறிக்கொண்டே போயிற்று. பத்திரகாளி போல் பாய்ந்து போனுள்.

இன்றைக்கு இந்தச் செங்கமலத்தை என்ன செய்தாலும் மற்றவர்கள் பேசமாட்டார்கள் காரணம், முத்தம்மா தானே தண்ணீர் எடுக்கும் வரிசைக்குத்

(15-ம் பக்கம் பார்க்க)

## சிந்தனையைத் தூண்டியது

“தாயின் தியாகம்” என்ற சிறுகதையைத் தாங்கி வந்த இவ்வாரச் சுதந்திரன்கூடவே என் சிந்தனையையும் தூண்டி விட்டது. கதை நன்ருக அமைந்துள்ளது. கதாசிரியருக்கு என் பாராட்டுக்கள், அதே சமயம் கதாசிரியரின் இயற்பெயரையும் அறிய மிகவும் ஆவலாக இருக்கிறேன். காரணம், 12—6—60-ல் பிரசுரமான “தியாகம்” என்ற என் சிறுகதைக்குப் பதில் கதையாக இது அமைந்திருப்பதே.

— மா. பாலேஸ்வரி, திருகோணமலை.

## “மறக்குமா இறக்கும்வரை?”

### கதாசிரியர் தரும் விளக்கம்

கடந்த 10-7-60 சுதந்திரனில் வெளியான “மறக்குமா இறக்கும் வரை?” என்ற எனது சிறுகதை சம்பந்தமாககடந்த 24-7-60 சுதந்திரனில் எழுதிய ஒரு சகோதரி “சித்திரை வருடப் பிறப்புக்கு மட்டக்களப்புப் பகுதியில் யாரும் வாண வேடிக்கை செய்வதில்லை” என்று குற்றம் சாட்டுகிருர். அவரின் அனுபவக் குறைவுக்காகப் பச்சாத்தாபப்படுகிறேன். ஈனு வெடியோடு சேர்த்து இள நீர், வில்வக் காய் போன்றவற்றில் செய்த வாணங்களையும் மற்றும் வெளியூர் வாணங்களையும் நாங்கள் கொளுத்தியிருக்கிருேம்; இப்போதும் கொளுத்திக் கொண்டு தான் வருகிருேம்.

“குருடியை மணம் செய்ய எந்த இளைஞனும் சம்மதிக்க மாட்டான்” என்கிருர் சகோதரி. இது உப்புச்சப்பற்ற பேச்சு. சகோதரி பெண்ணுனபடியால் ஆண்கள் அப்படிச் செய்ய மாட்டார்கள் என்று எண்ணுகிருர்போலும்! குருடிகளை மணந்து கொண்ட எத்தனையோ பேரை நம் சமூகத்தில் இன்றும் காணக்கூடியதாயிருக்கும்போது சகோதரியின் கூற்று அனுபவக்குறைவைத்தான் காட்டுகிறது. உண்மை அன்பின் முன்னால் கண் குருடு, காது செவிடு, கால் நொண்டி போன்றவை துரிசுக்குச்சமானம். குமார், சரசுவின் மேல் தன் உயிரையும் வைத்திருந்தான்; அவளுக்காக எதையும் செய்ய ஆயத்தமாயிருந்தான்; அதனுல்தான் அவளை மணந்தான். அதுதான் உண்மையான அன்பு—ஆசை—பாசம்.

“குருடி என்று தெரிந்தே அவளை மணந்து கொண்ட ஆசிரியர், ஊரார் குருடி என்று பேசுவதைச் சகித்துக்கொள்ளாமல் கொழும்புக்குக் கொண்டுபோகிருர் சிகிச்சைக்கு” என்று கூறி அதில் பிழைகாணும் சகோதரி கதையை விளங்கிக் கொள்ளமுடியாத அப்பாவியாக இருக்கிருர். அவருக்கு எப்படி விளக்கியும் பயனில்லை.

குமாரின் கண்களை எடுக்கச் சம்மதித்த டாக்டரின் செயலையும் சகோதரி கண்டிக்கிருர். ஒருவர் தானுகவே விரும்பித் தனது கண்களை கண்ணில்லாத ஒருவருக்குக் கொடுக்க முன்வர, அதை 'டாக்டர்' நிறைவேற்றி வைப்பதில் தற்செயலாக மரணம் நிகழ்வது எந்தச் சட்டத்தின் எத்தனையாம் பிரிவுப்படி டாக்டரைக் குற்றத்துக்குட்படுத்துமோ எமக்குத் தெரியாது. இன்றைய உலகில் இப்படிப் பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. சகோதரியின் கிணற்றுத் தவளை நிலைக்காக அனுதாபப்படுகிறேன்.

“கல்யாணத்தோடு கதையை முடித்திருக்கலாம்” என்றும் கூறுகிருர் சகோதரி. அப்படியானுல் அங்கு கதையே இல்லாமல் போய்விடுகிறது. காதல்; இடையில் கஷ்டம்; கடைசியில் கல்யாணம் என்பதோடு முடியும் பல தமிழ்த் திரைப்படங்களைப் போல் கதை முடியவில்லை என்று எண்ணுகிருர் போலும். காதல், கஷ்டம், கல்யாணம் என்ற அவ்வளவோடு யதார்த்த இலக்கியம் முடிந்து விடுவதாகச் சகோதரி எண்ணினுல், அவரின் அறியாமைக்காக வருந்துகின்றேன்.

“பொன்னு”

தாமரைக்கேணி வீதி,
மட்டக்களப்பு.
25-7-60.

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், “ஆனந்தா தைலத்தை”த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுயாட்சியின் பலன் ஒவ்வொரு பிரஜைக்கும் கிடைக்கிறது சோவியத்தில்

## அங்குள்ள சமஷ்டி அரசமைப்பு அப்படி—60 இனங்களும் இனிது வாழ்கின்றன

## நான்கு அமைப்பில் ஆட்சி எல்லாமே சுதந்திரமானவை

செ. அழகரத்தினம்

சமத்துவ அடிப்படையில், சமஷ்டி அரசமைப்பில் பல தனித்தனி இனங்கள் தம்மிச்சைப்படி ஒன்று சேர்ந்த ஒரு குடும்பந்தான் சோவியத் ருஷ்யா.

சோவியத் ருஷ்யாவின் அரசியல் திட்டத்தை உருவாக்கியவர்கள் ஒற்றை ஆட்சி அரசமைப்பை உதவாக்கரை என்று தள்ளிவிட்டார்கள். சுமார் 60 க்குக் குறையாத இனங்கள் வாழும் ஒரு நாட்டுக்கு ஒற்றை ஆட்சி அரசமைப்பு எந்த விதத்திலும் பொருந்தாது என்பது அவர்கள் கருத்து.

இந்த 60 இனங்களும் தனித்தனி அமைப்புகள். ஒவ்வொரு இனத்துக்கும் அதற்கென்று தனியான தேசியப் பண்பாடு, கலாசாரம், மொழி, சரித்திர வரலாறு கலைப்பாங்கு ஆகியவை உண்டு. ஆகவே இந்த இனங்களினதும் மாறுபட்ட அபிலாஷைகளையும் நிறைவேற்றி அவற்றைத் திருப்திப்படுத்த நான்கு விதமான ஆட்சி முறைகளைக் கொண்ட அரசமைப்புகள் அங்கு தோற்றுவிக்கப்படலாயின.

### நான்கு அமைப்புகள்

(அ) யூனியன் குடியரசுகள்.

(ஆ) சுயாட்சிக் குடியரசுகள்.

(இ) சுயாட்சிப் பிரதேசங்கள்.

(ஈ) தேசியப் பகுதிகள்.

பலவின மக்களைக் கொண்ட சோவியத் யூனியனில் இவை ஒவ்வொன்றும் தனித்தனி அங்கங்கள். தங்கள் உள்ளூர் விஷயங்களில் தாம் நினைத்தபடி நடக்கப் பூரண உரிமை உடையவை.

### யூனியன் குடியரசுகள்

யூனியன் குடியரசில் உள்ளவர்களுக்கு யூனியன் குடியரசுப் பிரஜா உரிமை உண்டு. அதே வேளையில் சோவியத் யூனியனில் உள்ள எல்லாப் பிரஜைகளுக்குமுள்ள சோவியத் பிரஜா உரிமையும் இவர்களுக்கு உண்டு.

யூனியன் குடியரசுகள் தங்கள் சுயாதீனத்தைக் காட்டு முகமாகத் தமக்கெனத் தனிக்கொடியும் படையும் வைத்திருக்கின்றன. சோவியத் யூனியன் ஏதாவது எல்லை மாற்றம் செய்ய விரும்பினால் சம்பந்தப்பட்ட யூனியன் குடியரசின் சம்மதத்தைப் பெற்றே அப்படிச் செய்ய வேண்டும்.

### 16 யூனியன் குடியரசுகள்

படை வைத்திருப்பது மட்டுமல்ல; விரும்பினால் எந்த ஒரு நாட்டுடனும் தம்மிஷ்டப்படி நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ளவும் யூனியன் குடியரசுகளுக்கு உரிமையுண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக யூனியன் குடியரசுகள் விரும்பினால் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து போகலாம். இத்தகைய உரிமைகளும் அதிகாரங்களும் உள்ள யூனியன் குடியரசுகள் மொத்தம் 16 சோவியத் யூனியனில் உள்ளன.

### சுயாட்சிக் குடியரசுகள்

சுயாட்சிக் குடியரசு என்பது யூனியன் குடியரசின் ஒரு பகுதி. இங்குள்ளவர்களுக்கு இந்தப் பகுதிக்கு உரிய தனிப் பிரஜா உரிமையோடு யூனியன் குடியரசுப் பிரஜா உரிமையும், சோவியத் யூனியன் பிரஜா உரிமையும் உண்டு. சுயாட்சிக் குடியரசுகள் தமக்குத் தேவையான சட்டங்களை ஆக்கிக் கொள்ளும். அந்தச் சட்டங்கள் அந்தந்தச் சுயாட்சிக் குடியரசு எல்லைகளுக்குள் செல்லுபடியாகும். தமது எல்லைகளுக்கு உட்பட்ட பிரதேச விஷயங்களில் எல்லாம் சுயாட்சிக் குடியரசுகளுக்கு தன்னாட்சி உரிமை உண்டு.

### தாய்மொழியில் நிர்வாகம்

சுயாட்சிக் குடியரசுகள் தத்தமது மக்களின் தாய்மொழிகளில் நிர்வாகத்தை நடத்தும். தாம் எந்த யூனியன் குடியரசின் அங்கமோ அந்த யூனியன் குடியரசின் கொடியையே சுயாட்சிக் குடியரசுகள் தத்தமது பெயர்களோடு சேர்த்து வழங்கும். சொந்தப் படை அமைக்கவோ, அல்லது வெளி நாடுகளுடன் ராஜீயத் தொடர்புகள் வைத்துக் கொள்ளவோ சுயாட்சிக் குடியரசுகளுக்கு உரிமை கிடையாது. மற்றும் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து போகும் உரிமையும் இவற்றிற்குக் கிடையாது.

### சுயாட்சிப் பிரதேசங்கள்

சிறிய தேசிய இனங்களையுடைய யூனியன் குடியரசுகள் அந்த இன மக்களுக்காக சுயாட்சிப் பிரதேசங்களை வைத்திருக்கின்றன. இந்தப் பிரதேசங்களுக்கு தத்தமது பிரதேச எல்லைகளுக்குள் சுயாட்சி நடத்தும் உரிமை உண்டு. நிர்வாகத்தைத் தத்தம் பிரதேச மொழிகளில் நடத்துகின்றன.

### தேசியப் பகுதிகள்


தேசியப் பகுதிகள் என்பவை சுயாட்சிப் பிரதேசங்கள் போன்றவை. சிறுபான்மை இனத்தவர்களுக்கானவை. இந்த தேசியப் பகுதிகளுக்கும் உள்ளூர் ஆட்சியில் சுதந்திரம் உண்டு. நிர்வாகத்தைத் தங்கள் தங்கள் மொழிகளிலேயே நடத்துகின்றன. அதற்கான அதிகாரம் உள்ளவையாக அவை விளங்குகின்றன.

நட்புறவால் பிணைக்கப்பட்ட சோவியத் ருஷ்யாவின் நேரடியான அங்கங்களாகவோ அல்லது மறைமுகமான அங்கங்களாகவோ இந்த நான்கு அமைப்புகளும் திகழ்கின்றன. பல விதங்களில் ஒவ்வொன்றும் தனித்து இயங்குகிறது. அது மட்டுமல்ல சோவியத் ருஷ்யாவின் சமஷ்டி அரசில் இந்த அமைப்புகள் ஒவ்வொன்றுக்கும் பங்கு உண்டு.

### எல்லோருக்கும் சுயாட்சியின் பலன்

சோவியத் ஒவ்நாஷனலிட்டீஸ் (Soviet of Nationalities) என்று அழைக்கப்படும் சோவியத் யூனியனின் உயர்தர அதிகார சபைக்கு யூனியன் குடியரசுகள் ஒவ்வொன்றும் 25 பிரதிநிதிகளை அனுப்புகின்றன. இப்படியே சுயாட்சிக் குடியரசுகள் 11 பிரதிநிதிகளையும், சுயாட்சிப் பிரதேசங்கள் 5 பிரதிநிதிகளையும், தேசியப் பகுதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரதிநிதியையும் அனுப்புகின்றன. இவ்வித நேரிய சோவியத் யூனியன் அங்கு வாழும் ஒவ்வொரு பிரஜையையும் சுயாட்சியின் பலனை அனுபவிக்க வைக்கிறது.

இங்கே தரப்பட்டிருக்கும் படம் சோவியத் யூனியனின் அமைப்பை விளக்குகிறது.



### பட விளக்கம்

நேர்க் கோட்டுக் கட்டங்கள் மொத்தம் 16 படத்தில் உள்ளன. அவை அனைத்தும் சோவியத் ருஷ்யாவிலுள்ள யூனியன் குடியரசுகள்.

அந்தக் கட்டங்களில் 1 இலக்கமிட்ட சிறு கட்டங்கள் சுயாட்சிக் குடியரசுகள்

2 இலக்கமிடப்பட்டவை சுயாட்சிப் பிரதேசங்கள்

3 இலக்கமிடப்பட்டவை தேசியப் பகுதிகள்

# பெரஹெரா தமிழ்...

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

### சமயற்காரப் பெண்கள்

இந்தக் கடவுளர்களைத் தாங்கிச் செல்லும் யானைகளுக்குப் பின்னால் சமயற்காரப் பெண்கள் தங்களுடைய ஆகச் சிறந்த ஆடைகளால் தம்மை அணி செய்து கொண்டு செல்வர். அவர்கள் கைகளிலே சக்கலை ஏட்ட விசுக்கிகள் இருக்கும். இந்தச் சமயற்காரப் பெண்களுக்குப் பின்னால் நாட்டிலுள்ள நல்ல பெண் மணிகளும் கனவான்களும் துணிகரமாக அணிவகுத்துச் செல்வது போன்று போவார்கள். இந்த நாட்களில் போல அந்த நாட்களிலும் நொக்ஸ் உண்மைப்படி பின்வருமாறு சொல்லியிருக்கிறார்: "சிலோவில் (சிலோன் — இலங்கை) அழகர்களும் அழகிகளும் தங்கள் கடவுளர்கள் நகரில் பவனி செல்லும்போது அதில் கலந்து கொள்ளத் துணிகரமாகச் செல்கிறார்கள்."

### வீதி அலங்காரம்

தெருக்கள் கொடிகளாலும் பந்தல்களாலும் அலங்கரிக்கப்படுகின்றன. பந்தல்களில் மரக்கிளைகளும் இலைகளும் அலங்காரத்துக்காகச் சேர்க்கப்படுகின்றன. குறிப்பாகத் தென்னோலைகளும் பிறவும் "பிலைச்சல்"கள் மாதிரித் தொங்கவிடப்படுகின்றன. பவனி செல்லும் வீதிகள் இரவிலும் பகலிலும் விளக்கேற்றி வைக்கப்படுகின்றன.

### தளபதிகளும் போர் வீரர்களும்

பவனியின் கடைசிப் பகுதியில் தளபதிகள் தமது போர் வீரர்கள் சகிதம் செல்கிறார்கள். வைபவம் ஒழுங்காகவும் சீராகவும் நடைபெறுவதற்காக இவர்கள் மன்னரால் அனுப்பப்படுகிறார்கள். பவனி ஒருக்கால் இரவும் ஒருக்கால் பகலுமாக நடைபெறுகிறது. விழா முழுமையும் அமாவாசைத் தினத்திலிருந்து பூரணைத் தினம் வரைக்கும் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

வர்ணம் பூசிய தடி முழுமுதற் கடவுளை அதாவது வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய தேவரைக் குறிப்பதாக நொக்ஸ் கூறுகிறார். முதலாம் கஜபாகு காலத்திலிருந்து கதிர்காமக் கடவுளாகிய முருகன் வணங்கப்பட்டு வரும் வரலாறும் பத்தினித் தெய்வமாகிய கண்ணகியின் செல்வாக்கும் தம்மில் பலருக்கும் தெரியும்.

### சிலப்பதிகாரம் கூறுவது

வர்ணம் பூசிய தடியைப் பற்றிய விஷயத்தை அறியப் பழைய காப்பியமான சிலப்பதிகாரத்தை நாம் புரட்ட வேண்டும். பத்தினித் தெய்வமும், கோவலனது கற்புடை மனைவியுமாகிய கண்ணகியைப் பற்றிக் கூறும் சிலப்பதிகாரம் நாட்டியம் சம்பந்தமானதோர் காவியமே. சமய சம்பந்தமான நாட்டியங்கள் எப்படி முருகன், விஷ்ணு, துர்கா வழிபாடுகளைச் சுற்றி வளைத்து ஆடப்பட்டன என்பது பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

### கஜபாகு கொணர்ந்த குடியேற்றவாசிகள்

பத்தினிக் கோவில் ஸ்தாபித்த பொழுது சேரமன்னன் செங்குட்டுவனின் அழைப்பை ஏற்று இலங்கை வேந்தன் முதலாம் கஜபாகு (கி. பி. 113—135) அங்கு நேரில் சென்றிருக்கலாம் என்பது நினைவுகூர வேண்டியது. அவர் திரும்பி வந்த பொழுது நுட்ப வேலைகளில் சிறந்த தமிழர்கள் பலரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு வந்தார் என்றும் அவர்களை பல பகுதிகளிலும் இங்கு குடியேற்றி வைத்தார் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தக் குடியேற்றவாசிகள் எல்லோரும் தமிழர்கள். நொக்ஸ் கண்டு எழுதிய பெரஹெரா இந்தக் குடியேற்ற வாசிகளாலேயே இலங்கையில் தொடங்கப்பட்டிருக்க வேண்டும். தங்களுடைய தாய் நாட்டிலிருந்து தம்மோடு கொண்டு வந்த பத்தினிப் பண்பாட்டை இங்கு அவர்கள் துவக்கி வைத்திருக்கலாம். முருகன் வழிபாடு விஜயன் காலத்துக்கு முந்தியதோ இல்லையோ—எப்படி இருந்தாலும் அது மிகப் பழமையானது என்றே தோன்றுகிறது.

### வர்ணம் பூசிய தடிபற்றிச் சிலப்பதிகாரம் கூறுவது

வர்ணம் தீட்டிய தடியைப் பற்றிய விஷயம் சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கதை, இந்திரலோகத்திலே நாட்டியம் நடந்து கொண்டிருந்த போது இந்திரனுடைய மகன் ஜயந்தனும் ஊர்வசியும் ஒழுக்கக்கேடாக நடந்து கொண்டார்கள். அதைக் கண்டதும் அகஸ்தியர் இருவரையும் சபித்தார். ஜயந்தன் விந்தியத்தில் பிரம்புத்தடியாகவும், ஊர்வசி பூவுலகத்தில் ஒரு நாட்டியக்காரியாகவும் பிறக்கக் கடவது என்று அகஸ்தியர் சாபமிட்டார். ஆயினும் அவர் பின்னர் அதன் வேகத்தைக் குறைத்து இன்னொரு மாதிரி நடக்க வேண்டும் என்று சபித்தார். அதன்படி அந்தப்பிரம்புத்தடி தலைக்கோலாகப் பாவிக்கப்பட வேண்டும். அது வர்ணம் பூசி அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும். பவனிகளில் நாட்டியத்தின் அடையாளமாக அது எடுத்துச் செல்லப்பட வேண்டும். ஊர்வசி மரபில் பூவுலகில் பிறப்பவர்கள் எல்லோரும் அந்தத் தலைக்கோலை வணங்க வேண்டும். பின்னர் தான் தமது நாட்டியத் திறனைக் காட்ட வேண்டும்.

### பிரகாரம்தான் பெரஹெரா

தமிழில் உள்ள "பிரகாரம்" என்ற சொல்லே சிங்களத்தில் பெரஹெரா என்று வந்திருப்பதாகத் தோன்றுகிறது. பிரகாரம் என்றால் இந்துக் கோயிலைச் சுற்றியுள்ள வீதி. ஆகவே சுற்றுப் பிரகாரம் என்பதும் சுற்றுப் பிரகாரம் என்ற தமிழ்ச் சொற்களில் இருந்தே வந்திருக்க வேண்டும். சுற்றும் பிரகாரத்தின்போது சாமி வீதிகள் வழியாக, சங்கீதம், நாட்டியம் முதலிய கேளிக்கை நிகழ்ச்சிகளோடு சுற்றிக் கொண்டு வரப்படுகிறது.

சிலப்பதிகாரத்திலும், தமிழில் உள்ள பௌத்த காவியமான மணிமேகலையிலும் இந்திரனை கௌரவிக்கு முகமாக நடத்தப்பட்ட விழா பற்றி வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சி நடிகர் எம். ஜி. ஆருக்கு தடை

## மொழிப் போரில் குதிக்க!

## அண்ணாத்துரை விதித்தார்

## மற்றும் கலைஞர்களுக்கும் விலக்கு

இம்மாதம் 31-ந் தேதி தமிழ் மொழிகாக்கத் தி. மு. கழகம் முன்னின்று நடத்தபபோகும் இந்தி எதிர்ப்பு அறப்போராட்டத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கலந்து கொள்ளக்கூடாது என்று அவருக்குத் தடை போட்டிருக்கிறார் சி. என். அண்ணாத்துரை.

எம். ஜி. ஆர். தவிர நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர்; ஆகியோருக்கும் விலக்கு அளித்திருக்கிறார் அண்ணாத்துரை கலைஞர்கள் எவரும் போராட்டத்தில் நேரடியாகக் குதிக்க வேண்டாம் என்று அவர் கேட்டுள்ளார்.

அண்ணாவின் அழைப்பு வந்ததும் என்னை ஸ்டுடியோவில் அல்ல; போராட்டக்களத்தில்தான் சந்திக்கலாம்" என்று புரட்சி நடிகர் கூறியிருந்தது தெரிந்ததே. அதன் பின்னர்தான் அண்ணாத்துரை கலைஞர்களுக்கு விலக்கு அளித்தார்.

இதற்கான காரணத்தையும் திரு. அண்ணாத்துரை சொன்னார். தி. மு. கழகக் கலைஞர்களை கலைத்துறையிலிருந்து ஒழித்துக் கட்ட பயங்கரச் சதி நடந்து வருவதாகவும், அப்படி இருக்கும் போது கலைஞர்கள் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறைச் செல்ல நேர்ந்தால் அது ஆபத்தாக முடியும் என்றும் அவர் சொன்னார்.

### காகொல்லை இ. தி. மு. க. கிளை

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக காகொல்லைக் கிளையின் செயற்குழு கூட்டம் கடந்த 30-7-60-ல் கழகப் பணிமனையில் நடைபெற்றது.

அவ்வமயம் விரைவில் அப்புத்தளையில் நடைபெறவிருக்கும் இ. தி. மு. க. பொதுக்கூட்டத்திற்கு நிதி திரட்டி மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

தி. மு. கழகக் கலைஞர்களை ஒழித்துக் கட்டச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டு இருக்கும் விஷமிகளுக்குக் கலைஞர்கள் சிறை செல்வது தங்கள் திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பளிப்பதாகும் என்று திரு அண்ணாத்துரை கூறினார்.

இதன் காரணமாவே தி. மு. கழகக் கலைஞர்களுக்குத் தாம் விலக்கு அளிப்பதாகவும் அவர் அறிவித்தார்.

## சங்கப்பலகை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சவுக்கடி. இருந்தாலும், கதைக்கு முன்னும் பின்னும் அனாவசியமாக 'காவட் சேபம்' செய்திருக்க வேண்டாம். 'திரை'யும் 'சோறு'ம் சுமார் தான்.

வழக்கம் போல ஜீவாவும் 'வெள்ளாளன்-பறையன்' கதை ஒன்றை எழுதியுள்ளார். ஒடிந்து விழும் கதைகளுக்கு 'முண்டு' கொடுக்க மலரிலேயே ஒரு கட்டுரை இருப்பது நல்லதாய்ப் போயிற்று.

நல்ல காகிதத்தில் அழகாக அச்சிட்டவர்கள், அச்சுப் பிழைகளைக் கவனித்துக் குறைத்திருக்கலாம்.

இந்தத் தரத்தில் இலங்கையில் மலர்கள் அதிகம் வெளிவருவதில்லை என்பதை நினைத்துப் பார்த்தால், வெளியிட்டவர்களைப் பாராட்டலாம். மலரின் விலை ரூபா 1/—.

—ஆர். எஸ்.



புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

## கத்தி முனையில் குழந்தையைக்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

முடித்துவிட்டுத் தமக்கு ஏற்பட்ட மூன்று காயங்களின் தழும்புகளையும் எமக்குக் காட்டினார் மாணவர் செல்வரத்தினம். தமிழனுடைய வீரம் இன்னும் குன்றவில்லையென்பதற்கு மூன்று முத்திரைகளாக ஜொலித்தன அந்த மூன்று வெற்றித் தழும்புகளும்!

### வீரத் தந்தை

திரு. வேங்கடராமன் தம்பதிகள் சென்னை சென்றதும் கொழும்பில் உள்ள, செல்வரத்தினத்தின் தந்தையாருக்கு டிரங் டெலிபோனாலவ் பேசி, மாணவருக்கேற்பட்ட கத்திக் காயங்களுக்காக துக்கம் தெரிவித்தனராம்.

அப்போது செல்வரத்தினத்தின் தந்தை அளித்த பதில் என்ன தெரியுமா?

"ஒரு குழந்தையின் உயிரை ஒரு அதர்மனின் பிடியிலிருந்து காக்கும் முயற்சியில் என் மகன் உயிரிழந்தாலும் நான் கவலைப்படமாட்டேன்; பெருமைப்படுவேன், அவனுக்கு ஏற்பட்ட காயங்கள் ஒரு பொருட்டல்ல!" என்றாராம் அந்த வீரத் தந்தை.

யார் அந்த வீரத்தந்தை?

கொழும்பில் பிரபல வர்த்தகராகவும், கமலா பீடி உற்பத்தி ஸ்தாபனத்தின் உடைமையாளராகவும் இருக்கும் முதியவரான திரு. எஸ். வி பொன்னம்பலம் தான் அந்த வீரத் தந்தையாவார்.

### குடும்பம்

செல்வரத்தினத்தின் உடன் பிறந்த சகோதரி திருமதி மகேஸ்வரி அம்பலவாணர் கொழும்பு தமிழரசுக் கட்சியின் செயற்குழு உறுப்பினர். 1958-ம் ஆண்டு வகுப்புக் கலவரத்தின் போது தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள் அல்லவா?

அப்போது திருமதி மகேஸ்வரி அம்பலவாணரும் காரை நகரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டுணர்ச்சியும் தமிழுணர்ச்சியும் பாயும் இத்தகைய ஒரு வீர குடும்பத்தில் உதித்த செல்வரத்தினம் ஆற்றிய தீரச் செயல் இரத்தத்தோடு கலந்த தொன்று என்பது இப்போது தெரிகிறதல்லவா?

"வாருங்க அம்மாமாரே வாங்கிப் பாருங்க அம்மாமாரே.."
ஆ!! ஒருமுறை அணிந்தால் என்றும் மனதை விட்டகலாதது
புதிய
எலைட் பெற்றலின்.



எலைட் பெற்றலின்
பொலிபெஸ்ரர் நாரினால்
தயாரிக்கப்பட்டது.
❁ என்றும் கசங்காதது, வீட்டில் கழுவி உடன் அணியக் கூடியது, பெட்டி போடும் தொல்லை அற்றது.
❁ கண்கவர் மங்காத நிறங்களில் எங்கும் கிடைப்பது.
ஏகவிநியோகஸ்தர்கள்:-
குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
சில்லறை வியாபாரப் பகுதி: 110 & 114, மெயின் வீதி.
கொழும்பு.
மொத்த வியாபாரப் பகுதி 26, செட்டியார் வீதி.
—Mylads 466/60—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் மொழிப் போர்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தித் திணிப்பு அப்போது வலுப்படுத்தப்பட்டது. முன்னர்போல் இம்முறையும் தமிழகம் கொதித்து எழுந்தது. 1938 இந்திப் போரில் தமது முழுத் திறமையையும் காட்டிய திரு. அண்ணாத்துரை 1948 போருக்குத் தலைமை தாங்குகிருர் என்றதும் தோழைகளும் வீரர்களானுர்கள். அணியில் சேர விரைந்தார்கள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானமும் இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்டார்கள்.

## கொடுமை

எதிர்ப்பு மாநாடுகள் நடத்திக் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றினுர்கள். மறியல் செய்தார்கள். இவற்றின் விளைவாக நடந்த துக்ககரமான சம்பவங்களுள் எல்லாம் மிகக் கோரமானது, நிறைகர்ப்பவதியான தனலட்சுமி வேலாயுதம் என்ற வீராங்கனை பொலிஸ் லொறியில் ஏற்றி நடுக்காட்டில் கொண்டு போய்த் தட்டந்தனியாகத் தவிக்கவிடப்பட்ட கொடுமையாகும். சிறை சென்றவர்கள் அடி உதை பட்டவர்கள் பற்றியெல்லாம் சொல்லிமுடியாது.

இறுதியில் இப்போராட்டத்திலும் வெற்றிதான். ஆக, தமிழகத்தில் மொழிப் போராட்டம் தோற்றதாகச் சரித்திரம் இல்லை. தி. மு. கழகத்தினர் முன்னின்று போராட்டத்தை நடத்தினுல் தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று சொல்லத்தக்க வகையில வரலாறு அமைந்துவிட்டது.

## மூன்ருவது மொழிப்போர்

இந்தவரலாற்றுச் சிறப்புமிக்கவர்கள்தான் மூன்ருவது கட்டமாக இம்மாதம் 31-ந் தேதி இந்தி எதிர்ப்பு அறப்போர் தொடங்கப்போவதாக அறிவித்திருக்கிருர்கள். தமிழ்நாட்டில் இந்தி ஆட்சிமொழியாகக் கட்டாயமாகப் புகுத்தப்படுவதை எதிர்த்தே இப் போராட்டம் நடத்தப்படவிருக்கிறது.

நிதி சேர்ந்து கொண்டிருக்கிறது. அணியில் ஆயிரமாயிரமாக மக்கள் இரத்தக் கையெழுத்திட்டுச் சேர்கிருர்கள். ராஜாஜியும் மற்றும் பெரியார்களும் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கிருர்கள். பத்திரிகைகள் தட்டிக் கொடுக்கின்றன. மக்கள் உணர்ச்சி முட்டிக் கொண்டு நிற்கிறது. கழக வீரர்கள் அண்ணாத்துரையின் கண்சாடைகருக் காத்து நிற்கிருர்கள்.

போராட்டம் தொடங்கி விட்டால் முடிவு என்னவாகும்? முன்னைய போர்களைப்போல இதிலும் ரத்தம் சிந்த வேண்டி நேரலாம். ஆனுல் இறுதியில் வெற்றிகிட்டும் எனவே நம்பலாம். சரித்திரம் அப்படி. அறம் வெல்லாமல் போகுமா?

# உழவன்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனும் அவன் நிலைப் பொருட்களும் அவன் வாழ்வின் நிலைமையை வெளிப்படுத்துகின்றன.

உழவன் உளுந்த விதையையும், ஓட்டைக் கலப்பையையும் உபயோகிக்கிருன்; அவன் நிலம் உரம் என்பதைச் சிறிதும் அறியாதது. தன் தொழிலில் தன் ஆன்ரேரின் முறைகளையே கையாளுகிருன்; துண்டு துண்டு நிலங்களைத் தனியாகவே இண்டிப் பயிர் செய்கிருன்; புது முறைகளையும் நவீனக் கருவிகளையும் அன்று தமிழகம் கண்டதுமில்லை. அத்தமிழகத்திலே வாழ்ந்த இவனும் கண்டானில்லை. அன்றைய அவனின் வாழ்வு பூமியின் கருணையிலே தங்கியிருந்தது.

உழவன் தொழில் உயர்ந்ததுதான். அவன் வாழ்க்கையும் செயலும் வான் நோக்கியதாகவே இருக்கிறது. அவன் வாழ்வில் ஒளியுண்டாக-புதுமையுண்டாக-புத்துணர்ச்சியுண்டாக வானம் துளியை வழங்க வேண்டும். இன்றேல், அவன் கண்ணீர்த் துளியை மண்ணிலுதிர்த்திக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

மனிதன் விருப்பப்படி இயற்கை ஒத்துழைப்பதில்லை. ஆகவே, இயற்கைக்கு மாருகத்தான் சில வற்றைச் செய்ய முற்படுகிருன்; அவற்றில் இன்பமடைகிருன்! வெற்றியும் பெறுகிருன். அரசாங்கத்தினர் பல கால்வாய்களையும் பல குளங்களையும் அமைத்திருக்கிருர்கள். இவைபோன்றவை இன்னும் எண்ணற்றன தேவை என்பதைச் சில ஆண்டுகளாக வானம் நிரூபித்துவிட்டது. உழவனும் வானின் ஏமாற்றத்திலிருந்து தப்ப வேண்டும்.

பல்வளமும் பெருகிச் சிறந்தோங்கியிருந்த இந்நாடு, இன்று பிறநாட்டினரிடம் உணவுப்பொருள் வேண்டிப் பிச்சை கேட்கும் நிலை வந்தது இத்தமிழகத்திற்குப் பெரும் அவமானமாகும். ஆனுல் இந்நிலை மாறி நாம் ஏற்றமடைய இயன்றவரையில் இளைஞராகிய நாம் நிலத்தைப் புனல் தாழ்ந்த புது வயல்களாக்க வேண்டும். அவற்றிற்குத் தேவையான நீர்த்தேக்கங்களை அமைக்க வேண்டும். அப்போதுதான் இனி வரப்போகும் சமஷ்டி அரசியலில் நம் பொருளாதார வளம் பெருகும்-நாடு வளமுறும்-தமிழரசு செழித்தோங்கும்.

## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவருமல் பெற்றுக் கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.

# மக்கள் குரல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்து நிற்கிருர்கள் வாங்குவதற்கு. ஆனுல் நடப்பதோ வேறு.

இரண்டொரு ஆடுகள் முழு உருப்படியாகவே தனிப்பட்ட ஆட்டிறைச்சிக் கடைக்காரருக்கு ஏற்கனவே திட்டமிட்டபடி ரகசியமாக விற்கப்படுகின்றன. இதனுல் முனிசிப்பல் இறைச்சிக் கடையில் ஏமாற்றப்பட்ட மக்கள் பலர், கூடுதலாக பணம் கொடுத்து அதே இறைச்சியை தனிப்பட்டவர் நடத்தும் இறைச்சிக் கடையில் வாங்குவதன் மூலம் வஞ்சிக்கப்படுகிருர்கள் மேற்கண்ட நிகழ்ச்சி ஜூலை மாதம் 31ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை மார்க்கட்டில் நடைபெற்றதை ஒருசிலர் கவனிக்கத்தான் செய்தனர். ஆகவே இதுபோன்ற செய்கைகள் இனியும் நடைபெருமலிருக்க கொழும்புமேயர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

—எஸ். சண்முகராசா,
வெள்ளவத்தை.

## நல்லூர் தொகுதி தேர்தல் சம்பவம்

நல்லூர் தொகுதியில் தேர்தல் சம்பவம் என்ற தலைப்பில் கடந்த வாரச் சுதந்திரனில், "அது மட்டுமல்ல. சுற்றடலில உள்ள சலவைத் தொழிலாளரின் பயிர் வகைகள்...பிடுங்கி எறியப்பட்டுள்ளன" என்று ஒரு பந்தி இருக்கிறது.

சலவைத் தொழிலாளரின் என்று இருப்பது கமக்காரர்களின் என்று இருக்க வேண்டும். நடந்தது நந்தாவில் உள்ள கமக்காரர்களின் பயிர்வகைகள் வெட்டிப் பிடுங்கி எறியப்பட்டதே.

—வி. பொ. அ. சண்முகநாதன்,
கொக்குவில்.

ஆகஸ்ட் 19-ம் தேதி
வெள்ளிக்கிழமை முதல்
குதூகலமான ஆரம்பம்!
*எல்பின்ஸ்டன் *ரீகல் *வின்ஸர்
[கொழும்பு] [வெள்ளவத்தை] [யாழ்ப்பாணம்]
மற்றும் 4 திரைகளில்
பாலாஜி—ராஜசுலோசனு
தேவிகா—பிரேம் நஸீர்—சந்திரபாபு
அசோகன்—என். லலிதா
நடிக்கும்
சகோதரி
டைரக்ஷன்: ஏ. பீம்சிங்
பாடல்கள்: கண்ணதாசன்
வசனம்: முரசொலிமாறன்



இதுவே கடைசி வாரம்!
எல்பின்ஸ்டன்
[மருதானை]
ஜெமினிவதி—இராமநாதன்
மாஸ்டர் வியாஸ நடித்த
கண் திறந்தது

கெபிட்டல்
(19-ம் தேதி முதல்)
எம். எஸ். சுப்புலட்சுமி
நடித்த
சாவித்திரி

செல்லமஹால
சிவாஜி கணேசன்,
பத்மினி, ராஜகுமாரி,
நம்பியார், எம். என். ராஜம்
நடித்த
தங்கப்பதுமை

ரீகல்
(வெள்ளவத்தை)
எம். ஜி. ராமச்சந்திரன்,
டி. ஆர். ராஜகுமாரி,
தங்கவேலு, சந்திரபாபு
நடித்த
குலேபகாவலி

வெற்றிகரமான 2-வது வாரம்!



சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்)
ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை) லிபேர்டி (பதுளை)
எஸ். எஸ். ராஜேந்திரன்—ராஜசுலோசன
டி. எஸ். பாலையா சூரியகலா—வி. கே. ராமசாமி
வி. ஆர். ராஜகோபால்—எஸ். ஏ. நடராஜன்
நடிக்கும்
ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்
சங்கிலித் தேவன்
கதை—வசனம்: சக்தி கிருஷ்ணசாமி
டைரக்ஷன்: பி. ஆர். பந்துலு
சங்கீதம்: டி. ஜி. லிங்கப்பா
பின்னணி: சௌந்திரராஜன்—சீர்காழி கோவிந்தராஜன்
ஏ. எம். ராஜா—பி. சுசீலா—பி. லீலா—ஜமுனாராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவ அமுதம்: 32

# கடிவது மற

நாம் விரும்பியது நடக்காத போது, எமக்குக் கஷ்டம் வந்த போது, துன்பம் வந்தபோது மனம் ஒடிந்து துக்கத்தில் ஆழ்ந்து போகிறோம். அப்போது யாராவது எம்மை அணுகினால், ஏதாவது கேட்டால் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. வந்தவரில் சீறிப் பாய்கிறோம். கேட்டவரில் சினந்து விழுகிறோம். இது ஏன்?

எமது கஷ்டமும், கவலையும் துன்பமும் அடுத்தவனுக்குத் தெரியுமா? தனது கஷ்டங்களைச் சொல்லி ஆறுதல் பெறவோ, உதவி பெறவோ, வேறு ஏதாவது தெரிந்து கொள்ளவோ எம்மிடம் வருபவனைச் சினந்து பேசி வருந்த வைத்தால் அது எப்படி? வெய்யில் வருத்தம் தாங்காமல் நிழல் தேடி ஓடி வருபவனுக்கு மேல் மரமே முறிந்து விழுந்தால்......?

என்ன கஷ்டம் வந்த போதும், எத்தனை துன்பம் சேர்ந்தபோதும் சீறுமல், சினவாமல், அன்பாய், ஆதரவாய் நடந்து கொள்ள வேண்டியது எமது கடமை. எமது கஷ்டத்துக்காக, எமது துன்பத்துக்காக மற்றவரையும் கஷ்டப்படுத்தவோ, துன்பப்படுத்தவோ கூடாது அது கடவுளுக்கு விரோதம்; நேர்மைக்கு விரோதம்; பெருந்தன்மைக்கு விரோதம்; வாழ்க்கைக்கே விரோதம்.

குழந்தை அம்மாவிடம் அணையும்போது அடித்து விரட்டுவதும், விருந்து வீடு தேடி வந்தபோது முகம் நிமிர்ந்து நோக்குதலும் வருத்தமான செயல்கள். வந்த விருந்தை வரவேற்று, அணைந்த குழந்தையை ஆதரித்து நல்லது செய்ய வேண்டும். விருந்தாளியின் முகம் மலரும் போதும், குழந்தையின் முறுவல் பெரும் போதும் எமது மனதில் மகிழ்ச்சி பெருகும்; உள்ளத்தில் இன்பம் ஊறி ஆறும் ஓடும். அந்த ஆற்று வெள்ளத்துடன் எமது துன்ப வெள்ளம் கரைந்து இருந்த இடமே இல்லாமல் இறந்து விடும்.

உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் சினந்து பேசக் கூடாது. அடுத்தவரைச் சினந்து கொள்ளும்போது மனதில் வெறுப்பு வளருகின்றது. அந்த வெறுப்பு விரோதமாகிப் பல குரோதங்களை வளர்த்து விடும். சிறியவர்களைத் தலைவயற்றுக் கடிந்து கொண்டால் அது அவர்கள் மனத்தில் வெறுப்பையும், பயத்தையும், துக்கத்தையும் வளர்க்கும் முழுமதி தேய்ந்து அழிந்து போவது போல் எம்மிலுள்ள அன்பும் மதிப்பும் அவர்களிடையே மறைந்துவிடும்.

எரிமலை வெடித்ததும் நெருப்புப் பிளம்பாகப் பெருகி சுற்றியுள்ள எல்லாவற்றையும் பொசுக்கி அழித்து விடுகிறதே அதைப் போல நாமும் சினந்து வெடிக்கும் போது வெறுப்பும் பகையும் பெருகி நட்புச் சுற்றம், அன்பு, இன்பம் எல்லாவற்றையுமே அழித்து விடுகின்றன.

"உள்ளிய தெல்லாம் உடன்
எய்தும் உள்ளத்தான்
உள்ளான் வெகுளி எனின்".

—ஏ. ஜீ. ஆனந்தன்.




# உழவன்

—ந. ஞானசூரியம்—

இரண்டு கெடுத்த வானம் ஒருநாள் பனிமிரங்கி மழையைப் பெய்கிறது. மறுநாட் காலை விடியுமுன்னரே விழித்தெழுந்தான் உழவன் மண்வெட்டியுடன் வயலுக்குச் சென்று நிலத்தைக் கொத்திப் பார்க்கிறான். நிலம் ஊறியிருக்கிறது; நிலம் காய்வதன் முன் விதைத்துவிட வேண்டும் என்று எண்ணுகின்றான். இவ்வித எண்ணத்துடன் வீட்டை நோக்கி விரைந்து செல்கிறான். சேமித்து வைத்திருந்த விதை முதலியவற்றை எடுத்துக்கொள்கிறான். கூலி ஆட்களுடன் சென்று இரண்டே நாளில் ஈரம் உலருமுன் விதைத்து விடுகிறான். மழை பெய்யும் என்ற நம்பிக்கையினால் ஐயமின்றி விதைத்த உழவன் துக்கந் தோய்ந்த முகத்துடன் வீட்டிலிருக்கிறான்.

வானம் காய்கிறது. ஆடிக் காற்று வீசுகிறது முளைத்த பயிர்கள் வாடிவிட்டன; சில கருகிவிட்டன. முயற்சியில் தளரா உழவன், கிணற்றிலிருந்த நீரையும் ஒரு துளியும் விடாமல் இறைத்துவிட்டான். பட்டுப்போன பயிர்கள் பசுமையாகவில்லை. கண்மணிகள்போல காத்து வந்த விதை மணிகளை தான் உண்ணும் பொருள்களாக உயர்ந்து விளையுமென்ற எண்ணத்துடன் மண்ணில் தூவிவிட்டான். ஆனால் அவன் கண்டது என்ன? கொண்டது என்ன? காய்ந்த பயிரைக் கண்டு கண்கலங்கிக் கவலைகொள்கிறான்.

"பண்டு விளைந்தோம்; இன்று விளையோம்" என்று நிலங் கூறவில்லை, வளம் குன்றிப்போனாலும் உழவன் ஊட்டும் உரத்தினால் ஓரளவு பண்டைய சத்தைமீண்டும் பெறுகின்றன.

வைகறையிலெழும் உழவன் வழக்கப்போலத் தன் தொழிலகமாகிய வயலை அடைகிறான். சில பயிர்கள் பழுத்துப் போக எஞ்சியவை சற்றுப் பசுமையாகத் தோன்றுகின்றன. காலை நேரமல்லவா? அவை சற்று மலர்ச்சியோடும் காணப்படுகின்றன. பசித்து வந்தோன் பால் பருகினாற் போல அவற்றைக் கண்ட உழவனின் அகமும், முகமும் அந்த பயிர்களைப்போல ஒருங்கே மலருகின்றன. வேலையை முடித்து வீட்டுக்கு வந்த உழவன் மாலையிலும் தன் தொழிலகமாகிய வயலை அடைகிறான்.

மாலை ஆகியதும் அஸ்தமிக்கப்போகும் சூரியன் மஞ்சள் வெய்யிலால் வையத்தைத் தங்க மயமாக்கிக் கொண்டிருக்கிறான் காய்ந்த பயிர்கள் பொன்னிறமாகக் களைத்து வரும் உழவனின் கண்ணில் காட்சியளிக்கின்றன. அதைக் கண்ட உழவன் களிப்படைவானா? கண்ணீர் விடுவானா? பட்ட கஷ்டத்தை அவன் அறிவான். கற்பனை செய்யும் புற்போக்காளருக்குத் தெரியுமா? அவன் உள்ளக்காட்சி பயிர்களின் தாயாகிய "உழவன் வருந்திய மனத்துடனும் [illegible] முகத்துடனும் [illegible] [illegible] தரையை அடைகிறான்.

காய்ந்த புல்லை மனமின்றித் தின்றுகொண்டிருந்த மாடுகள் தாயைக் கண்டு அழும் சேய்கள்போலக் கதறுகின்றன. தன்னைக் கண்டு தலைநிமிர்ந்து, கதறும் தன் மாடுகளைக் கருணை உள்ளத்தோடு கண்நோக்குகிறான் உழவன். அவற்றின் முகங்களில் தோன்றும் துன்ப நிலையின் குறியைக் கண்டு அவஸ்தைப்படுகிறது அவன் மனம்.

அவன் அவற்றிற்கு என்ன ஆறுதல் அளிப்பான். பட்டினியால் வாடும் ஏழைகளுக்கு உணவைத் தராது ஊக்கமூட்டும் சொற்களை கூறும் உத்தமர் போல உரைத்து என்ன பயன்? சொற்களை அவை உணருமா? உற்சாகப்படுமா? வயிறு நிரம்பிவிடுமா? இவற்றை நினைந்து துக்கப்படுகிறான் உழவன்.

பச்சைப் புல்லை இச்சைப்படி மேய்ந்து, வாரி நீரை வயிறு நிரம்பக் குடித்து, வாலைத் தூக்கி நாலு காலில் துள்ளிய காலம் சென்றுவிட்டது. 'போரின் நின்ற என் மக்களே! உங்களுக்குப் பிடுங்கிப்போடவும் நீர் இல்லையே! மழை துளி விழாததால் பசும் புல்லையும் காண முடியவில்லையே. பயன்படாது பணத்தை ஒளிக்கும் வஞ்சகரின் நெஞ்சம்போல வானும் மழையைப் பதுக்கி வைத்துக்கொண்டதே. நான் என்ன செய்வேன்! இறைவன் உள்ளம் இழகும். இனி விரைவில் இடுக்கண் நீங்கி இன்புறுவோம்! வருந்தாதீர்" என்று கூறியவண்ணம் மாடுகளுடன் வீட்டுக்குப் புறப்படுகிறான்.

நிலவின்றி வானம் இருண்டு தோன்றும் போதெல்லாம் நித்திரையில்லாக் குடியானவன் நீலவிண்ணை நிமிர்ந்து நோக்கி மேகங்களின்றி நட்சத்திரங்கள் தோன்றியிருப்பதைக் கண்டு விசனப்படுகிறான். என்றோ ஒருநாள் மேகங்கள் சூழ்ந்த எழுந்ததால் இதயம் குளிர்கிறான் அவை பெய்யாது பொய்யாகி மறைந்ததும் ஏமாற்றத்தினால் ஏங்குகிறான். இளைத்த எருதும், மெலிந்த உடலும், களைத்த முகமாய்க் காட்சியளிக்கும்

(13-ம் பக்கம் பார்க்க)

# பாரதி யார்?

—மு. சடாட்சரம்—

எட்டய புரத்தில் பிறந்ததுயார்?
இறவாப் புகழ் பெற்றதுயார்?
அன்னிய ராட்சி இருளகற்ற
பள்ளி எழுச்சி பாடியதார்?
பாழும் வறுமையில் பிறந்தது யார்?
பாப்பாப் பாட்டுப் பாடியதார்?
பள்ளிப் படிப்பை வெறுத்துவிட்டு
தெள்ளு ஞானம் தேடியதார்?
தீண்டாமையை ஒழித்தது யார்?
தேன் சொட்டச் சொட்டப் பாடியதார்?
ஆணும் பெண்ணும் சரியென்று
ஆடிப் பாடச் செய்ததுயார்?
கண்ணன் பாட்டுப் பாடியதார்?
காதல் பாட்டுப் பாடியதார்?
நிலையே குலைந்த தமிழன்னை
தலையே நிமிரச் செய்தது யார்?
தமிழின் பெருமை உணர்ந்தியதார்?
தன் மானத்தை வளர்த்ததுயார்
சுதந் திரத்தை உணர்த்திய நல்
சுப்பிர மணிய பாரதியார்.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

## வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 5.

பெயர் ......................................................

பாடசாலை ......................................................

விலாசம் ......................................................

......................................................

...................................... ......................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## வளர்மதி புதிய மருமக்கள்

2979 வை. குணரெத்தினம், திருகோணமலை.
2980 க. தங்கவடிவேல், புகோலி கிழக்கு.
2981 த. திருவைபநாதன், சாவகச்சேரி.
2982 சி. சச்சிதானந்தவேல், திருகோணமலை.
2933 ஐ. சண்முகம், யாழ்ப்பாணம்.
2984 அ. செல்வி எலன்ராணி, தும்பளை.
2985 ச. குலசூரியன், வெள்ளவத்தை.
2986 வ. வேல்முருகு, பருத்தித்துறை.
2987 எஸ். தியாஸ், அக்கரைப்பற்று.
2988 சு தெட்சணாமூர்த்தி, அக்கரைப்பற்று
2989 வி. பாலகுமாரன், மல்லாகம்.
2990 ம. விஜயமூர்த்தி, அக்கரைப்பற்று.
2991 செல்வி ஜெயமணி, திருக்கோயில்.
2992 செல்வி ரீட்டா மண்டலநாயகம், மானிப்பாய்.
2993 செல்வி ஜெயாவதி ஜோன், நோர்வுட்.
2994 சே. சித்திரஞ்சனன், திருகோணமலை.
2995 இ. ஜெயலெட்சுமி தேவி, நாவலப்பிட்டி.
2996 இ. வெற்றிக்கொடி, நாவலப்பிட்டி.
2997 க. மகேஸ்வர சர்மா, மட்டக்களப்பு.
2998 சரோஜினிதேவி நமசிவாயம், மட்டக்களப்பு.
2999 செம்ம் செல்வநாயகம் வயிரமுத்து, கரவெட்டி கிழக்கு.
3000 செல்வி பெ. மங்கையர்க்கரசு, அக்கரைப்பற்று.

வள்ளுவர் குறள்: 30

# ஐந்தின் வகை தெரிவான்

"சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு"

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தின் வகைகளையும் ஆராய்ந்து அறிபவனுடைய அறிவிலே உலகம் தங்கியுள்ளதாம். நாம் என்ன செய்கிறோம்? மேற்கூறப்பட்ட ஐந்தின் வகையையும் ஆராய்கின்றோமா? அன்றி, அவற்றிலே விழுந்து ஊறிப் போகின்றோமா?

ஊறிப்போகின்றோம் என்றுதான் சொல்ல வேண்டும். ஐம்புலன்களுக்கும் அடிமையாகி, அவற்றிலே விழுந்து ஊறி, நிலை பெற மாட்டாது தடுமாறி, அவற்றினால் அலைப்புண்டு அல்லற்படுகின்றோம். வாழ்க்கையின் வழி அஃதன்று; அதனாற் பெரும்பயனும் கிட்டாது. புலன்களுக்கு அடிமையானவர்களின் அறிவிலே உலகம் தங்காது; அத்தகைய ஆற்றல் உண்டாதற்கு இடமேயில்லை.

ஐம்புலன்களின் நுகர்ச்சியாகவே நாம் உலகத்தை அறிகிறோம். இவ்வுலகமும், நிலம் நீர் தீ வளி வான் என்ற ஐந்து பூதங்களினாலே ஆக்கப்பட்டதுதான், உலகம் என்பது இன்னதென்று. அஃது ஆக்கப்பட்ட ஐம்பூதங்களையும் ஆராய வேண்டும்; உலகத்தை நுகரும் போது, ஐம்புலன்களும் எந்த முறையிலே, எந்த அளவிலே சென்று பயன்படும் என்பதையும் தேர்ந்து கொள்ள வேண்டும்.

அங்ஙனம் ஆராய்ந்து தேர்ந்தவர்களே மறைமொழி பேசும் நிறைமொழி மாந்தர். உலகம், அவர்கள் அறிவினுள் அடக்கம்.

—பா. ஆறுமுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## இந்து இளைஞர் மன்றம்

கைதடி கிழக்கு இந்து இளைஞர் மன்ற செயற்குழுக் கூட்டம் கடந்த 31-7-60-ல் கைதடி, கிழக்கு சனசமூக நிலையத்தில் மன்ற உப தலைவர் க. ச. சிவசுப்பிரமணியம் தலைமையில் செல்வன் சி. மயில்வாகனத்தின் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது.

அத்தருணம் மன்ற மேற்பார்வையாளர் திரு. சி. சுப்பிரமணியம் "கல்வி" என்னும் பொருள் பற்றியும் திரு. த. சங்கரப்பிள்ளை "ஆலேசர் சரித்திரம்" என்னும் பொருள் பற்றியும் இனிய சொற்பெருக்காற்றினர். மாணவர் சினிமாப் பார்க்கலாமா? என்னும் விவாதம் நடைபெற்றது. இவ் விவாதத்தில் செல்வர்கள். த. பாலசுப்பிரமணியம், அ. சிற்றம்பலம், செ. கந்தசாமி சே. சுந்தரம் ஆகியோர் பங்கு பற்றினர். முடிவில் பார்க்கக் கூடாது என்று சபையோர் தீர்மானித்தனர்.

பின் மன்றத்தால் நடத்தப்பட்ட இளைஞர் சிந்தனைப் போட்டி விடைகளைாவும் பார்வையிட்டு முதலாம் பரிசை கைதடியைச் சேர்ந்த சி. பொன்னம்பலத்திற்கும், இரண்டாம் பரிசு நாவலப்பிட்டியைச் சேர்ந்த எஸ். கனகசபைக்கும், நல்லூரைச் சேர்ந்த க. லுரா சேந்திரம் ஆகியோருக்கும் பகிரிட்டு அனுப்பி வைக்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

முடிவில் தலைவர் நன்றியுரையுடனும் தேவாரபாராயணத்துடனும் இனிது முடிவெய்தியது.

## இ. தி. மு. க. நிருவாகிகள் கூட்டம்

இலங்கை திராவிடர் முன்னேற்ற கழக முக்கிய நிர்வாகிகளும், ஆதரவாளர்களும் அடங்கிய ஒரு ஆலோசனைக் கூட்டம் கடந்த 31-7-60-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு, புதிய சோனகத் தெரு, 125-ம் இலக்கத்தில் திரு. எச். பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

அணிமையில் நடைபெற்ற பொதுத் தேர்தலால் எழுந்துள்ள அரசியல் சூழ்நிலைகள் பற்றி நீண்ட நேரம் ஆலோசனை நடத்தியதின்பின் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அகில இலங்கை அருந்ததியர் சங்கம்

அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தின் பொதுக் குழு கூட்டம் கடந்த 30-7-60 சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் திரு. மு. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தின் நீண்ட கால ஊழியர்களில் ஒருவரான திரு. பா. மாணிக்கம் என்பவரின் அகால மரணம் குறித்து இப்போதுக் குழு ஆழ்ந்த துக்கமடைகிறது. அவரது பிரிவால் துயருற்றிருக்கும் உறவினர்கட்கும் குடும்பத்தாருக்கும் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது.

காலஞ் சென்ற திரு. மாணிக்கத்திற்கு மரியாதை தெரிவிக்கு முகமாக இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் கலை விழா நடத்த ஏற்பாடு

"உலகப் பிரசித்தி பெற்ற நடிகர் திலகம் திரு. உதய சங்கரின் சகோதரராகிய பிரபல சங்கீத வித்வான் பண்டிதர் திரு. இரவிசங்கர் முதன் முதலாக யாழ்ப்பாணம் விஜயஞ் செய்து அளிக்கப்போகும் சித்தார் வாத்தியக் கச்சேரி மிகவும் மகத்தானது. இதை அனைவரும் பயன்படுத்திக்கொள்ளுதல் நலமாகும்"

இவ்வாறு யாழ் பிரதேசக் கலாமன்றத் தலைவரும் வட மாகாண அதிபருமாகிய திரு. எம். ஸ்ரீ காந்தா கூறினார்.

பிரதேசக் கலா மன்றத்தின், இசைப் பிரிவு, நாட்டியப்பிரிவு, கிராமியப் பாடல் நடனக் கூத்துப் பிரிவு, சித்திரப் பிரிவு, கைத் தொழிற் பிரிவு முதலாகவுள்ள உப பிரிவுகளின் தலைவர்களும் நிர்வாக அங்கத்தவர்களும் சமுகங்கொண்ட இக் கூட்டத்தில் செப்டம்பர் மீ. 22-ந் தேதி முதல் நான்கு நாட்களுக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கலை விழா நடத்துவதென்றும், அவ்விழாவில் இசைக் கச்சேரி, கிராமிய கூத்து, நடனம், என்பன நடத்துவதென்றும் கலைப் பொருள் களடங்கிய கலைக் காட்சி ஏற்படுத்துவதென்றும், தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொரு உபசபை தலைவர்கள், செயலாளர்கள் வேறும் பிரமுகர்களும் கொண்ட நிர்வாகக் கமிட்டி நியமிக்கப்பட்டது.

## சிவராத்திரி விழாச் சபை அங்குரார்ப்பணம்

"சைவ விழாக்களைக் கொண்டாடும் பொழுது அதற்கென ஒரு குழுவை அமைத்து அதன் சட்ட திட்டங்களுக்கு அமையச் செயலாற்றுதல் சாலச் சிறந்ததெனக் கருதுகின்றேன். சிவராத்திரி விழா சைவ மக்கள் கொண்டாட வேண்டிய ஒரு முக்கிய விழாவாகும். இதற்கென ஒரு குழுவை அமைத்தால் வருடம் முழுவதும் சிந்தித்துச் செயல் புரிய முடியுமென நம்புகின்றேன். இப்படிப்பட்ட ஒரு குழு சிவராத்திரி விழாவினை மட்டுமன்றி ஏனைய சைவ சமய விவகாரங்களையும் திறம்பட நடத்த முடியும்; இன்னும் சைவப் பாடசாலை சமய வகுப்புகள் ஆதியனவற்றை நடாத்தி சைவத்தை ஆர்வமுள்ள இளைஞர்கள் நன்கு வளர்க்கக் கூடியதாகவும் இருக்கும்." இவ்வாறு கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் திரு. திரு. என். மாணிக்க இடைக்காடர் சிவராத்திரி விழாச் சபையொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

சபையின் செயலாளர் திரு. ச. சுப்பையா கடந்த வருட அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில்; பண்டைக் கால வழக்கிலிருந்தே சைவ சமயத்தைப் பல சங்கங்கள் மூலமாக வளர்த்து வந்தனர். அது போன்ற இன்றும் சங்கங்கள் அமைப்பதின் மூலமாகத்தான் சைவத்தை வளர்க்கலாம். சைவத்தை வளர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கோடு தான் ஆண்டுகள் தோறும் சிவராத்திரி விழாவினையும் இது போன்ற விழாக்களையும் சைவ சமய ... யைக் குறிக் கோளாகக் கொண்டு பல பணிகள் நிகழ்த்துவதற்காக ஒரு சபையை அமைப்பது வேண்டற்பாலனவாகும். நம் சைவக் குழந்தைகள் சமய அறிவில் மட்டரகமாக இருக்கின்றார்கள். இப்படியே போய்க்கொண்டிருந்தால் எம் வருங்கால சந்ததிகளின் எதிர்காலத்தை எப்படியென்று நிர்ணயிக்க முடியாது. எனவே யாம் சைவ சமயத்தையும், நமது எதிர்காலச் சந்ததிகளின் முன்னேற்றத்தைக் கருதி சிறிதாவது ஆக்கப் பணி புரிய முன் வரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அடுத்து திரு. விநாயகமூர்த்தி பேசுகையில் நாட்டியக் கலை தெய்வத்தோடு சம்பந்தமுடையது. ஆகவே தான் தரங்குறையாத நாட்டியக் கலை தெய்வத் தோடு சம்பந்தமுடையது. ஆகவே தான் தரங்குறையாத நாட்டியம் முதலியவற்றைக் கோயிலில் நிகழ்த்துவது பிழையாகாது. எனவே இச் சபை இடங்க யாவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திருவாளர்கள்: வே. சுப்பிரமணியம், வ. செல்வரத்தினம், நா. வே. கனகசபை, சி. இராசதுரை, அ. நவரத்தினம், வ. குமாரசிங்கம், வ. சிவஞானம் மற்றும் பலரும் பேசினார்கள்.

பின்னர் கீழ்க்கண்டவர்கள் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு. என். மாணிக்க இடைக்காடர், உப தலைவர்கள்: திருவாளர்கள் அ. நவரத்தினம், வ. குமாரசிங்கம், கௌரவ காரியதரிசி: திரு ச. சுப்பையா, உபகாரியதரிசி: திரு. வ. செல்வரத்தினம், கௌரவ தனாதிகாரி: திரு. நா. வே. கனகசபை, உபதனாதிகாரி: திரு. க. தியாகராசா; நிர்வாக சபை அங்கத்தவர்களாக திருவாளர்கள். க. சின்னப்பா, சி. இராசதுரை, வ. சிவஞானம், வே. சுப்பிரமணியம், வே. விநாயகமூர்த்தி, வ. சி. செல்லப்பா, கே. எஸ். செல்லையா, சேதுராமன் செட்டியார், சதானந்தன்.

## பரீட்சை சபையின் புதிய நிருவாகிகள்

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் ஐந்தாம் வகுப்புப் பரீட்சைச் சபையின் புதிய நிர்வாகிகளாகத் திரு. வ. கந்தையா தலைவராகவும், திரு இ. க. தியாகராசா உப தலைவராகவும், திரு க. மறவராயர் காரியதரிசியாகவும், திரு. க. சத்தியானந்தசிவம் உப காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அணிமையில் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு. க. நல்லதம்பி தலைமை வகித்தார்.

# தமிழரைக் காக்கக்கூடிய கட்சி தமிழரசுக் கட்சிதான்

# வேறு எதுவும் இல்லை,

## சென்னை "தனியரசு" கருத்து

இலங்கைவாழ் தமிழரைக் காக்கக்கூடிய கட்சி தமிழரசுக் கட்சி ஒன்றுதான் என்றும் வேறு எதுவும் இல்லை என்றும் அந்தக் கட்சியை விட்டால் தமிழருக்கு வேறு கதி இல்லை என்றும் தி. மு. கழகப் பிரமுகர் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பியை ஆசிரியராகக்கொண்டு சென்னையிலிருந்து வெளிவரும் நாளிதழ "தனியரசு" தலையங்கம் தீட்டியிருக்கிறது.

18-7-60 தேதியிட்ட பிரஸ்தாப தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

ஈழத்தில் வாழும் தமிழர்களுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறோம்.

ஈழத்தமிழர்கள் தமிழரசுத் தந்தை செல்வநாயகத்தினை முழுக்க முழுக்க நம்பாவிட்டால் அவர்களுக்கு வாழ்க்கையில்லை என்பது நாம் கூற விரும்பியது.

ஈழத் தமிழர்கள் இலங்கைத் தீவில் அமைதியுடன் வாழவேண்டுமானால், அவர்கள் கட்டாயம் தமிழரசுக் கட்சியைத் தமது வாழ்வுக் காதாரமான அமைப்பாகக் கொண்டேயாகவேண்டும்.

தமிழரசுக் கட்சி ஒன்றுதான் ஈழத் தமிழர்களின் வாழ்வில் அமைதிநிலைவைக் கொண்டு சேர்க்க முடியும் என்பதை நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

இந்நிலையில் தமிழரின் கடமை என்ன?

ஒருமுகப்பட்டுத் தமிழர் நிற்க வேண்டும். எந்த வேற்றுமை தங்களுக்குள்ளிருந்தாலும் அதை மறந்து ஒரே சக்தியாகத் தமிழர் திரண்டெழவேண்டும்.

அவ்வாறு திரண்டு எழுந்து தம் உரிமைக்குரலை ஒரே குரலாக எழுப்ப வேண்டும். அதற்கு ஏற்ற கருவி தமிழரசுக் கட்சியை தவிர வேறு எதுவும் இல்லை.

இலங்கைத் தமிழரைக் காக்கக் கூடிய ஒரே கருவி தமிழரசுக் கட்சிதான்.

தமிழரசுக் கட்சியும், அதைப் பிறப்பித்து வளர்த்த தந்தை செல்வநாயகமும் தமக்குள்ள பொறுப்பையுணர்ந்து தமிழர்களுக்கு அமைதியான வாழ்வை அளிக்க அரும் பாடுபட்டு வருவதுதான் நமக்கு மன நிறைவைத் தருகிறது. தமிழரசுக் கட்சி இருக்கின்ற காரணத்தினால்தான் தாய்த் திருநாட்டிலுள்ளவர்கள், ஈழத் தமிழருக்கு நல்வாழ்வு கிடைக்குமென்று நம்பி அமைதியோடு இருக்கிறார்கள்.

கடைசியாக ஒன்று சொல்வோம்:—

தமிழர்கள் உலகப் பந்தின் எம்முனையிலிருந்தாலும் அனாதைகள் அல்லர். அந்தக் காலம் மலையேறிவிட்டது தாய்த் திருநாட்டிலுள்ள தமிழர்கள் அவர்களுக்கு ஆதரவாக என்றுமிருப்பார்கள்.

# உடைந்த பானை!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை தாங்கி நின்றான். அவன் குடத்தை தள்ளி வைத்து விட்டு கடைசியாக வந்த இந்தச் செங்கமலம் எப்படி தண்ணீர் பிடிக்க முடியும்? முத்தம்மா நடத்தப்போகும் வெஞ்சமரில் இன்றுதான் நேர்மை இருக்கிறது.

காற்றெனக் குமுறி வந்து சென்ற முத்தம்மா தாமதிக்க வில்லை. 'கண்மண்' தெரியாமல் வந்த ஆத்திரத்தில் 'அந்த இந்த'க் கதைக்கு இடம் வைக்காமல், ஒரே உதை! செங்கமலத்தின் பானை தெறித்துச் சிதறிற்று!

ஆனால் அடுத்த விநாடி அங்கு கூடி நின்ற அனைவரும் முத்தம்மாவைப் பார்த்து 'ஒஒ'வெனச் சிரித்தனர். வீராங்கனை போல் நின்ற முத்தம்மா விஷயம் புரியாமல் உடையுண்ட பானையை நோக்கினாள். அவளுக்கு உடம்பு ஒடி விறைத்தது. காரணம் உடையுண்ட பானை முத்தம்மாவினுடையதேதான்! செங்கமலத்தின் பானை ஒரு பக்கமாகக் கவிழ்க்கப்பட்டிருந்தது.

வஞ்சகமில்லாத செங்கமலம் முத்தம்மாவின் பானைக்கே தண்ணீர் பிடித்துக்கொண்டு நின்றாள் என்பதையும் அதைப் ... தான் தன் பானைக்குப் ... முத்தம்மாவிற்கு அதிக ...

அதோ இப்போது கூட உடையுண்ட பானை ஓடுகளை பாதையிலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டிருப்பவளும் அந்தச் செங்கமலந்தான்!.


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




ஒருவரின் ஆயுள் கால முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி.

மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன் : 4243, 5060.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமாக இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

## கிங்ஸ்லி பிளாஸா நவா வெலிங்டன்

[கொழும்பு] [வெள்ளவத்தை] [கொம்பனித்தெரு] [யாழ்ப்பாணம்]



## விஜயா ஸ்ரீகிருஷ்ணா

[மட்டக்களப்பு] [திருகோணமலை]

**பக்த ராவணனின் பக்தித் திறனை எடுத்துக் காட்டும் பாங்கான பைந்தமிழ் காவியம்!**

**தீந்தமிழ் மொழியில் தீட்டி எடுத்த திவ்விய திரை ஓவியம்!!**

மிகக் கூடிய செலவில் தயாரிக்கப்பட்டதும் பல காட்சி சோடனைகளும் நிறைந்த படம்.

நீங்கள் ஒவ்வொருவரும் தவறாது பார்த்து மகிழவேண்டிய படம்.




டைரக்ஷன்: கே. சங்கர்

இசை: ஆர். சுதர்ஸனம் - ஆர். கோவர்த்தனம்

வசனம்: வலம்புரி சோமநாதன்

பின்னணி பாடியவர்கள் : சிதம்பரம் ஜெயராமன் — சீர்காழி கோவிந்தராஜன் — எம். எல். வசந்தகுமாரி
பி. சுசீலா — டி. எஸ். பகவதி — ஏ. பி. கோமளா.

## மைலன்

[கொழும்பு]

ஜெமினி கணேசன்,

சாவித்திரி, தங்கவேலு, டி. எஸ். பாலையா,

முத்துலட்சுமி

நடித்த

## அதிசய திருடன்

## 19-ம் தேதி வெள்ளி

முதல் ஆரம்பம்!

## சபையர்

[வெள்ளவத்தை]

அனேக பரிசுகளைப் பெற்று தரணியிலே தலைசிறந்த படமெனப் போற்றப்பட்டது

## பாதர் பஞ்சலி

(ஆங்கில மொழி பெயர்ப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்த, ... எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் சார்பாக பண்டாரநாயக்க மாவத்த, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஆகஸ்ட் 14-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.